

உ

சிவமயம்

# 64வது ஆண்டறிக்கை



**இறைவணக்கம்**

**திருச்சிற்றம்பலம்**

பிச்சக் குடைநீழற் சமணர் சாக்கியர்
நிச்ச மலர்தூற்ற நின்ற பெருமானை
நச்சு மிடற்றானை நல்லூர்ப் பெருமானை
எச்சு மடியார்கட் கில்லை யிடர்தானே.

அந்தரத் தெழுந்த ஓசை
அன்பினிற் பாணர் பாடும்
சந்தயாழ் தரையிற் சீதந்
தாக்கில்வீக் கழியும் என்று
சுந்தரப் பலகை முன்நீர்
இடுமெனத் தொண்ட ரிட்டார்
செந்தமிழ்ப் பாண னாருந்
திருவருள் பெற்றுச் சேர்ந்தார்

**திருச்சிற்றம்பலம்**

## மாமன்ற வாழ்த்து

இந்து வாழ் சீர் இந்நெடு உலகெங்கு மோங்கி
அந்தி வாய் நிழலிடை அரும்பணி யாற்ற வேண்டி
சுந்தரப் பூசநன்னாள் சுடர் விரித்தெழும் இலங்கை
இந்து மாமன்றப் பைங்கூழ் தழைத்தினி வாழி! வாழி!!

(அகில இலங்கை இந்து மாமன்றம் உதயமான போது அன்றைய முகாமைப் பேரவை உறுப்பினர்களில் ஒருவரான திரு. க. வேலுப்பிள்ளை அவர்களால் பாடப்பெற்ற வாழ்த்துப்பா)

## பொன்விழா வாழ்த்து

இன்பநலம்புரி அகில இலங்கை இந்து மாமன்றம்
செயும் பணியால் இந்து மக்கள்
பொன் பெருகிச் சுகம்பெருகி புனிதநீற்றுப் புகழ் பெருகி
ஐந்தெழுத்தின் ஞானம் பெருகி
அன்பு நெறி அகிம்சைநெறி பெருகி வாழ்வில்
அருள் பெருகி ஐம்பானாண்டுயர்வு பெற்றார்
மின்பொலி செஞ் சடையானின் அருளால் இன்னும்
மேருவெனப் பணியாற்றி மன்றம் வாழீ !

(மாமன்றத்தின் ஐம்பதாண்டு நிறைவையொட்டி ஞானவித்தகர் அருட்கவி சீ. வினாசித்தம்பி அவர்கள் வழங்கிய வாழ்த்துப்பா)

# 01.  மாமன்றம் பற்றிய ஒரு முன் கண்ணோட்டம்

எல்லாம்வல்ல ஸ்ரீ சிவகாமிஅம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருவருளால் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் மாமன்றத்தின் 64வது ஆண்டறிக்கையை, அத்திருவருளின் பயனாகச் சமர்ப்பிக்கின்றோம்.

இற்றைக்கு அறுபத்துநான்கு ஆண்டுகளுக்கு முன் இந்த உச்ச நிறுவனம் உதயமானது. இந்நாட்டில் வாழ்ந்த, தீர்க்கதரிசனம் மிக்க சைவப்பெரியோர்களின் பெருமுயற்சியின் பயனாக, ஜயவருடம் தைத்திங்கள் இருபத்திரண்டாம் நாள் (06-02-1955) தைப்பூசத் திருநாளன்று, பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் எம் பெருமானின் திருவருளைப் பெற்றுக்கொண்டு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மண்டபத்தில் கூடிய இந்து நிறுவனங்களின் பிரதிநிதிகள் மாமன்றத்தினை ஆரம்பித்துவைத்தனர். ஆறு தசாப்தங்களின் முடிவில் இன்றும் வேதனைகளையும், சோதனைகளையும் எதிர்நோக்கி வாழும் எமது மக்களின் இன்னல்களைக் கூடியவரையில் குறைக்கும் மனிதநேயப் பணிகளுக்கு முன்னுரிமை தந்து மாமன்றம் அதன் சேவையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

“இறைபணிநிற்க” என்ற மகுடவாசகத்திற்கு அமைவாக ஆன்மீகப் பணிகளுடன் கல்விப்பணி, சமூகநலன்பணி எனப் பல்வேறு பணிகளையும் எம் மக்களுக்காக ஆற்றி வருகின்றோம்.

இவற்றிற்கு மேலாக இயற்கை அனர்த்தங்கள் உட்பட எமது மக்களிற்கு ஏற்படும் எந்த இடர் கண்டும் உடன் நிவாரண உதவிகளை வழங்க மாமன்றம் என்றும் பின் நிற்பதில்லை.

விரிவான வரலாற்றுப்பதிவுகளுக்கு வருமுன், மாமன்றத்தின் ஆறுதசாப்தகால பணிகளில் முக்கியமானவை பற்றி முதலில் ஒரு கண்ணோட்டம் விடுவது எமது கடமையாக அமைகின்றது.

**ஆன்மீகப்பணிகள்**

எமது மக்களிடையே ஆன்மீக உணர்வையும் இறைபக்தியையும் வளர்த்து அவர்களை எமது சமய வழியில் வாழ வழிவகுக்கும் பல பணிகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம் என்ற திருப்தியுடன் கூற எங்களுக்கு இறையருள் கிடைத்திருக்கின்றது.

ஆலய வழிபாட்டை மையமாகக் கொண்ட எமது சமயத்தில், மக்களை ஆன்மீக வழிபாட்டில் இட்டுச் செல்வதில் தொடர்ந்தும் ஆலயங்கள் வகிக்கும் முக்கியபங்கை எவரும் மறுக்கமுடியாது. ஆலயங்களைப் பேணி, ஆலயவழிபாடுகளை முறையாக நடத்துவதில் பெரும்பாலான ஆலய நிர்வாகங்கள் தங்கள் பொறுப்பைச் செவ்வனேயாற்றிவருகின்றன. எனவே, பின் தங்கிய இடங்களிலும் குறிப்பாக எமது இந்து மக்களுக்குச் சவாலாக இருக்கும் சூழலில் உள்ள ஆலயங்களுக்கு, அவை, அவ் ஆலயம்சார்ந்த சமூகப்பணிகளுக்கு எம்மாலான உதவிகளைச் செய்வதை எமது கடமை என்பதையும் மறவாது செயற்பட்டு வந்திருக்கிறோம்.

மேலும் ஆன்மீகக் கருத்தரங்குகள் மூலமும், “இந்து ஒளி” போன்ற எமது வெளியீடுகள் மூலமும் மக்களிடையே ஆன்மீக ஞான ஒளியைப் பரப்பி வருகிறோம்.

**சமூகநலன்பணிகள்**

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக, வேதனைகாளலும் சோதனைகளாலும் வாடுகின்ற எமது உடன் பிறப்புக்களுக்கு உதவிகள் வழங்குவதில் கண்ணும் கருத்துமாகச் சேவையாற்றி வந்திருக்கிறோம். மாமன்ற வரலாற்றின் அரைவாசிப்பகுதிக்கு மேல் சமூகப்பணிகள் மூலம் இறைபணியில் நின்றிருக்கிறோம். மாமன்றத் தலைமையகக் கட்டிடத்தின் மூலமாக கிடைக்கும் வாடகை வருமானத்தை, இந்து மக்களின் தேவைகளை உணர்ந்து, பாவித்து வருகின்றோம்.

யாழ் மண்ணில் ஓர் அலுவலகத்தை நிறுவி அங்கு இந்து ஆராய்ச்சி நிலையம், சைவவித்தகர் பயிற்சி நிலையம் என்பவற்றை நிறுவி, யாழ் மண்ணில் பல்வேறு பணிகளையும் செய்து வருவதுடன் மட்டும் நின்றுவிடாது, கிழக்கு மாகாணத்தில், மன்னாரில், வன்னியில், மலையகத்தில் எல்லாம் எமது சேவையை விஸ்தரித்திருக்கிறோம்.

மக்கள், போரின் கொடுமையால் பாதிக்கப்பட்டு, உள்நாட்டிலேயே அகதிகளாகி, நிர்க்கதியாகித் தவித்த போது அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதில் மாமன்றம் முன்னோடியாக இருந்தது. வடக்கில், மக்கள் இடம் பெயர்ந்தபோது அவர்களைத் தேடிச்சென்று அவர்கள் குறைதீர்க்க உதவி செய்தோம்.

பெற்றோர்களின் ஆதரவை இழந்த பிள்ளைகளுக்கு உதவியாக, தென்னிலங்கையில் ஒரு முன்னோடியாக, இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் இலவச மாணவர் விடுதியை நிறுவி நடாத்துகின்றோம்.

போரினால் வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து தவித்து வெளியேறிய மக்கள், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்கள், முக்கியமாக மண்சரிவு, வெள்ளம், போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் என, எமது உடன் பிறப்புக்கள் கண்ணீருங் கம்பலையுமாக இருந்த வேளையெல்லாம் ஓடிச் சென்று அவர்களின் பசியைப் போக்க எம்மாலான உதவிகளை வழங்கினோம்.

திருமுறிகண்டிக்கு அருகாமையில், சரவணப் பொய்கையுடன் கூடிய முருகப்பெருமானின் வழிபாட்டிடம் ஒன்றும், அதனோடிணைந்து போரினால் பாதிக்கப்பட்டு குடும்பத்தலைவனை இழந்த, பெண் தலைமைத்துவத்தைக்

கொண்ட குடும்பங்களுக்கு, வாழ்வாதாரத்திட்டமாக ஒரு சிற்றுண்டிச்சாலையும் அமைக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டப் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படிப் பலப்பல மனிதநேயப்பணிகளை ஆற்றிக்கொண்டு, அடுத்த தசாப்தத்தில் காலடி வைத்து எமது பணிகளை ஆற்றி வருகிறோம். இன்னும் பலப்பல புண்ணியச் செயல்களை ஆற்றி, மாமன்றத்தின் பணிகள் எதிர்காலத்திலும் மேலும் வளர ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை வணங்கி நிற்கின்றோம்.

**கல்விப்பணிகள்**

எமது மாமன்றத்தின் வரலாற்றில் சில மைல்கற்களை மாமன்றத்தின் கல்விப் பணிகள் பதித்திருக்கின்றன. மாமன்றக் கல்விக்குழு, நாட்டின் பல பகுதிகளிலும் கல்விக்கருத்தரங்குகளை நடத்தி வந்ததுடன், இந்நாட்டு இந்து மன்றங்களின் பிரச்சினைகளை உரிய இடங்களுக்கு எடுத்துரைத்து குரலெழுப்பவும் வழி செய்தது.

தேவைகள் கருதி மாணவர்களுக்குச் செய்துவரும் உதவிகளைத் தொட்டுக்காட்டி இருக்கிறோம். மேலும், ஆண்டுதோறும், ஆயிரக்கணக்கான இலவச அப்பியாசப்புத்தகங்களை அச்சடித்து, அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் வறுமைநிலையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கும் எங்களின் அனைத்து அங்கத்துவ சங்கங்கள் மூலம் வழங்கிவருகின்றோம்.

க.பொ.த உயர்தர வகுப்பில் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகப் படிக்கும் மாணவர்களுக்குப் பாடத்திட்டத்திற்கு அமைய ஒரு நூல் இல்லாது இருந்தது. இந்தக் குறையையும் 2014இல் மாமன்றக்கல்விக்குழு நிவர்த்தி செய்து "இந்து நாகரிகம்" எனும் தரமான ஒரு நூலை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் க.பொ.த. (உ/த) வகுப்பு மாணவர்கள் இந்து சமயத்தைக் கற்க ஊக்குவித்துப் பயிற்சிக் கருத்தரங்குகளையும் பல ஆண்டுகளாக மாமன்றக் கல்விக்குழு நடத்தி வருகின்றது. பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பிள்ளைகளின் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**வெளியீடுகள்**

கடந்த இரு தசாப்தங்களாக மாமன்றம் வெளியீட்டுத்துறையில் செய்துவரும் பணிகளை எமது மக்கள் பாராட்டி வருகின்றார்கள். அவர்கள் தரும் அந்த ஊக்கத்திலே மாமன்றம் இந்து மக்களின் சமய அறிவினை விருத்தி செய்ய இவ்வெளியீடுகள் மூலம் நல்லதொரு பணியை ஆற்றுகின்றது என்பதனைத் திருப்தியுடன் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

20 வருடங்களுக்கு மேல் **"இந்து ஒளி"** சஞ்சிகை ஒழுங்காக வெளிவந்து கொண்டிருக்கிறது. காலாண்டிதழாக சுடர்விட்ட இந்து ஒளி, சமீபகாலத்தில் இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளிவருவதுடன் சில விசேட சிறப்புமலர்களும் வெளி வருகின்றன. தவத்திரு யோகர்சுவாமிகளின் 50வது ஆண்டு குருபூசைச் சிறப்புமலர் பலரினதும் சிறப்பான வரவேற்பைப் பெற்றது.

வைரவிழாவையொட்டி 2016இல் **"இந்து ஒளி வைரவிழா மலர்"** இரு பாகங்களாக வெளிவந்தது. அவ் வைரவிழா மலரில் வெளிவந்த கட்டுரைகளும் ஆக்கங்களும் மிகவும் முக்கியமானது. கருத்தாழம்மிக்க இம்மலர் எம்மக்களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

2017ம் ஆண்டு இந்து ஒளி இதழ் தனது இருபதாவது அகவையினைப் பூர்த்தி செய்ததை முன்னிட்டு **20வது ஆண்டு நிறைவுச் சிறப்பு இந்து ஒளி**யையும், 2018ம் ஆண்டு **21வது ஆண்டு நிறைவுச் சிறப்பு இந்து ஒளி**யையும் அந்தந்த ஆண்டு தைப்பொங்கல் தினங்களில் வெளியிட்டுவைத்தோம்.

அத்துடன், 2017ம் ஆண்டு அமரத்துவமடைந்த முன்னாள் மாமன்றத் தலைவர்களான அமரர் விசுவநாதர் கயிலாசபிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக "கயிலாஸ் ஆலம்" என்ற சறிப்பு இந்து ஒளியையும், 2018ம் ஆண்டு அமரத்துவமடைந்த அமரர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் ஞாபகார்த்தமாக, **"நீலகண்டம்"** என்னும் இந்து ஒளி சிறப்பிதழும் வெளியிடப்பட்டது.

2016ம் ஆண்டு, முதன்முதலாகத் திருக்கணித - வாக்கிய **பஞ்சாங்கங்களின் சுருக்கத் தொகுப்பு** ஒன்றினைக் கையடக்க அளவில் வெளியிட்டிருந்தோம். அதற்குச் சிறப்பான வரவேற்புக் கிடைத்த காரணத்தினால் 2017-18, 2018-19 ஆண்டு காலப்பகுதிகளுக்கும் கையடக்கப் பஞ்சாங்கத்தினை வெளியிட்டோம். கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட கையடக்கப் பஞ்சாங்கத்தின் அளவு சிறிதாக இருக்கின்றதென்ற பின்னூட்டத்தினைக் கவனத்திற்கொண்டு 2019-20ம் ஆண்டுக்குரிய கையடக்கப் பஞ்சாங்கமானது அளவில் சற்றுப் பெரிதாக - அதேவேளை கையடக்கமாக வெளியிடப்பட்டது.

ஒவ்வொரு இந்து ஒளி இதழுக்கும், மனமுவந்து அருள் மடலை அனுப்பிவைக்கும் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளுக்கு எமது வணங்கத்தையும் நன்றியையும் குறிப்பிட்டேயாக வேண்டும். சில ஆலயங்களின் கும்பாபிஷேகங்கள், சர்வதேச இந்து சகோதரத்துவ மாநாடு, மாத்தளை முத்துமாரியம்மன் இரதோற்சவம், மகா சிவராத்திரி, நயினை நாகபூஷணி அம்மன் ஆலய மகோற்சவம், கதிர்காமக் கந்தன் உற்சவம், நல்லூர் கந்தசாமி கோவில் மகோற்சவம் போன்றவற்றை முன்னிட்டு '**இந்து ஒளி**' சிறப்பு மலர்களாக மலர்ந்து இருக்கிறது.

**சிவதொண்டர் அணியும் சைவவித்தகர் பயிற்சியும்**

மாமன்றம், சிவதொண்டர் அணியை ஆரம்பித்துப் பல இடங்களிலும் இயங்க வைக்க முயற்சிகள் செய்து கொண்டுவருகிறது. இதற்கு எமது மக்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் போதாது என்றே கூறவேண்டும்.

சிவதொண்டரணிப் பயிற்சிக் கருத்தரங்குகளையும் நாம் நடத்திவருகிறோம். இளைஞர்களுக்குச் சிவதொண்டர் சால்வையும், யுவதிகளுக்குச் சிவதொண்டர் கழுத்துப்பட்டிகளும் கொடுத்துவருகிறோம். திருக்கேதீஸ்வரத்தில் சிவதொண்டரணியானது, மகாசிவராத்திரி உட்பட மகோற்சவ காலங்களில் தனது சிறப்பான பணியை ஆற்றி வருகின்றது. சிவதொண்டரணிகளை நிறுவி, இயக்க, பாடசாலைகளும், சகல அங்கத்துவ சங்கங்களும், ஆலயக்குழுக்களும் முன்வரவேண்டும்.

இதேபோல், சைவவித்தகர் பயிற்சியை, எமது யாழ்.பணிமனையில் இருக்கும் இந்து ஆராய்ச்சி நிலையத்தில் ஆரம்பித்தோம். இந்தப் பயிற்சியைப் பெற்றவர்களில் இரண்டு சைவவித்தகர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்பின் கல்வியைத் தொடர்ந்து கற்றுப் பூர்த்திசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து நடாத்துவது முக்கியமானதொன்றெனினும், இதில் சேர எமது இளந் தலைமுறையினர் தயங்குவது வருந்தத்தக்கது.

**நடுத்தீர்ப்பு மையம்**

எமது ஆலயப் பிரச்சினைகள் நீதிமன்றங்களுக்குச் செல்லாது, நடுத்தீர்ப்பு மையம் மூலம் சுமுகமாக எம்மவரால் அப்பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும் எனக் கருதி, **“நடுத்தீர்ப்பு மையத்தை”** நிறுவி, அதற்கான விதிகளை ஆக்கி இருக்கிறோம். இதனை எமது ஆலய நிர்வாகிகளும் சம்பந்தப்பட்டவர்களும் கவனத்திற் கொள்ள வேண்டுகின்றோம்.

- *நடுத்தீர்ப்புமைய விதிகள் ஆண்டறிக்கையில் தனி அத்தியாயமாகத் தரப்பட்டுள்ளது.*

**அங்கத்துவ சங்கங்கள்**

எமது அங்கத்துவ சங்கங்கள் நாடளாவிய ரீதியில் பல மகத்தான சேவைகளைச் செய்து வருகின்றனர். அங்கத்துவ சங்கங்கள் எம்மிடம் உதவிகள் கோரிய வேளைகளில் அவற்றை ஆராய்ந்து ஆக்கபூர்வமான திட்டங்களைத் தெரிவுசெய்து, முடியுமானவரை உதவி வருகிறோம்.

இவையெல்லாம் இறைபணிகளாகவே கருதிப் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். ‘இறைபணி நிற்க’ என்ற மாமன்றத்தின் இலச்சியத்தினை என்றும் நினைவுகூர்ந்து, மனநிறைவுடன் இந்த ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்க எங்களுக்கு அருள்பாலித்திருக்கும் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் பாதாரவிந்தங்களில் இதனைச் சமர்ப்பிக்கிறோம்.

# 02. அஞ்சலி

ஈழத்தின் "சைவ எழுஞாயிறு" நாவலர் பெருமான், கிழக்கிலங்கையின் "தமிழ்வித்தகர்" சுவாமி விபுலானந்தர் ஆகியோர் முதல், அண்மைக் காலங்களில் இந்து-ஆன்மீக உலகில் புதுயுகம் சமைத்த தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இராமகிருஷ்ண மிஷன் கிழக்கிலங்கை தலைவர் ஸ்ரீ ஜீவானந்த மகாராஜ், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம இரண்டாவது குருபீடம் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் வரை பல மகான்களும், சமயப் பெரியார்களும், ஈழத்தின் இந்து மத எழுச்சிக்கும் இந்து மக்களுக்காகவும் வாழ்ந்து வழிகாட்டி மறைந்திருக்கின்றனர். எமது மாமன்றத்திற் பலவிதங்களிலும் பொறுப்புக்களையேற்று வழிநடத்திய பெருந்தகைகள் பலர் இன்று எம்முடன் இல்லை. இருப்பினும், அவர்களின் புனித ஆத்மாக்கள், மாமன்றத்தின் பணிகளுக்கு என்றும் நல்லாசிகள் தந்து வழிகாட்டிக் கொண்டிருக்கும், என்ற துணிவுடன் நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

மாமன்றத்துடன் இணைந்து பணியாற்றி, எமக்கு ஆதரவு தந்த சிலரை, கடந்த, ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் பின் இழந்துவிட்டோம். அவர்களையும், எமது முன்னோர்களையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்திக் கொள்கின்றோம்.

வருடாந்தம் நடத்தப்பட்டுவரும், மாமன்றத்தின், மறைந்த தலைவர்கள் அமரர் திரு. வே. பாலசுப்பிரமணியம் அமரர் திரு. வி.கயிலாசபிள்ளை மற்றும் திரு.கந்தையா நீலகண்டன் நினைவுப்பேருரைகளும், கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப்பேருரையும் தொடர்ந்தும் நடத்தப்படும். அந்த நினைவுப்பேருரை நிகழ்வுகளை, சிந்தனைக்களங்களாக அமைப்பது சிறப்பானது. அத்துடன், மாமன்ற வரலாற்றில் தடம்பதித்த, மறக்கமுடியாத பல அமரர்களையும் நினைவுகூர்ந்து ஆண்டுதோறும் ஆடி அமாவாசைத் தினத்தன்று கீரிமலைச் சிவபூமி மடத்தில் நீத்தார் நினைவு நிகழ்வினையும் நடத்தி அவர்களுக்கெல்லாம் நன்றி மறவாது அஞ்சலி செய்து வருகின்றோம்.



**1. அமரர், பேராசிரியர் பொன். பூலோகசிங்கம்**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பேராளராகவும், மாமன்றத்தின் வெளியீடுகளுக்கு சிறந்த ஆக்கங்களை நல்கி உதவிய ஒரு சிறந்த – பணிவன்பு மிக்க – தன்னடக்கமிக்க ஒரு பேராசானாகத் திகழ்ந்தவர் பேராசிரியர் அவர்கள். தமது ஆரம்பக்கல்வியை செட்டிகுளம் அரசினர் தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியிலும் கற்று, அங்கிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று – பேராசிரியர்கள் வி. செல்வநாயகம், ஆ. சதாசிவம், ச. தனஞ்சயராசசிங்கம், சு. வித்தியானந்தன் ஆகியோரின் மாணவராக விளங்கியவர்.

இலங்கை அரசின் பல்கலைக்கழகப் புலமைப்பரிசில் பெற்று 1963 முதல் 1965 வரை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியலறிஞர் பேராசியர் தோமஸ் பரோவின் கீழ் மொழியியல் ஆராய்ச்சி மேற்கொண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார்.

வவுனியாவில் முதலாவதாக கலாநிதிப்பட்டத்தைப் பெற்றுக்கொண்டவரும் இவரே என்பது சிறப்புக்குரியது.

கொழும்பு பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

1997 ஆம் ஆண்டின் பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார். பூலோகசிங்கம் அவர்கள் எழுதிய நூல்களில் தமிழ் இலக்கியத்தில் ஈழத்தமிழறிஞரின் பெருமுயற்சிகள், ஈழம் தந்த நாவலர் என்பன இலங்கை அரசின் விருதுகளைப் பெற்றுள்ளன.

இந்துக் கலைக்களஞ்சியம் , நாவலர் பண்பாடு, சிலப்பதிகார யாத்திரை, Poet Thambimuthu – a profile ஆகிய நூல்களையும் வரவாக்கியிருக்கும் பேராசிரியர் இவை தவிர, பல்வேறு மலர்கள் , இதழ்களில் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறார். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு – சமயம் – இலக்கணம் பற்றியும் எழுதியிருப்பவர்.

பண்டைத் தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் நெறி, தத்தை விடுதூது, பதினெட்டாம் நூற்றாண்டு வரையான ஈழத்துத் தமிழ் இலக்கியம், பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் வளர்ச்சி, ஈழத்துப் புராணங்கள், வன்னி நாட்டின் வரலாறு. கோணேசர் கல்வெட்டு, முருகவழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் இலக்கண விசாரம் முதலான கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

இவ்வாறு அயற்சியின்றி இயங்கியிருக்கும் பேராசிரிய அவர்களின் மறைவுக்கு மாமன்றம் தனது இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றது. அன்னாரது இழப்பு இந்து – தமிழ் உலகிற்கு ஓர் ஈடுசெய்தற்கரிய பேரிழப்பாகும்.


உ
சிவமயம்
அகில இலங்கை இந்து மாமன்றம்
1955 - 2018
நீத்தார் நினைவு
தலைமை தாங்கி வழிநடத்திய தலைவர்கள்
திரு. சி. குமாரசுவாமி
சேர் கந்தையா வைத்தியநாதன்
நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராஜா
திரு. எஸ். சோமசுந்தரம்
நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம்
திரு ஆ. சின்னத்தம்பி
திரு வே. பாலசுப்பிரமணியம்
திரு வி. கயிலாசபிள்ளை
திரு கந்தையா நீலகண்டன்
வாரி வழங்கிய கொடை வள்ளல்களின் குடும்பத் தலைவர்கள்
திரு. செல்லப்பா அருணாச்சலம்
திருமதி பே. மாணிக்கம்
திரு. சி. நடேசன்
திரு. க. துரைரத்தினம்
திரு. வே. பேரம்பலம்
திருமதி வி. பேரம்பலம்
மாமன்றத் தலைமையகத்தை நிர்மாணித்த சிற்பிகள்
திரு. வி. எஸ். துரைராஜா
திரு. என். ஏ. வைத்தியலிங்கம்
திரு. எஸ். ஞானப்பிரகாசம்
ஆன்மீக வழிகாட்டிய சுடர்கள்
சிவஸ்ரீ குஞ்சிதபாத குருக்கள்
சுவாமி ஜீவனானந்தா மகாராஜ்
சுவாமி அஜராத்மானந்தா மகாராஜ்
தெய்வத் திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
திருமதி. வசந்தா வைத்தியநாதன்
முக்கிய பதவிகளில் இருந்து வழிகாட்டிய செம்மல்கள்
திரு. கோ. அழ்வாபிள்ளை
திரு. ஆ. குணநாயகம்
கலாநிதி. க. வேலாயுதப்பிள்ளை
திரு. இ. நமசிவாயம்
திரு. மு. சிவராசா
திரு. எஸ். சச்சிதானந்தசிவம்
நீதியரசர் வை. மாணிக்கவாசகர்
நீதியரசர் செ. நாகலிங்கம்
நீதியரசர் க. ஸ்ரீஸ்கந்தராஜா
திரு. மு. கந்தசாமி
திரு. ச. சரவணமுத்து
திரு. இ. சண்முகம்
திரு. சின்னத்துரை (கல்கி)
திரு. அ. கருப்பண்ணாபிள்ளை
திரு. ஏ. சி. நடராஜா
திரு. எம். கே. செல்வராஜா
திரு. எஸ். கே. துரைராஜா
திரு. மாணிக்க இடைக்காடர்
திரு முத்தையா கதிர்காமநாதன்
திரு. ஏ. ஆர். சுரேந்திரன்



மற்றும் பொறுப்புகளையேற்று / சேவையாற்றிய முகாமைப் பேரவை தொண்டர்கள்
திரு. கே. பாலசுப்பிரமணியம்
திரு. எஸ். ஆர். யோகநாதன்
திரு. வீ. கெங்காதரன்
திரு. கே. இ. ஆறுமுகம்
திரு. ஆர். மயில்வாகனம்
திரு. பி. கருப்பையா
திரு. எம். நாகரத்தினம்
திரு. எம். கே. சாம்பசிவம்
திரு. எஸ். சிவபிரகாசம்
திரு. எம். சுப்பிரமணியம்
திரு. வி. வல்லிபுரம்
திரு. ஆர். சிவகுருநாதன்
திருமதி பொன்மணி குலசிங்கம்
திரு. தி. துரைசிங்கம்
திரு. வி. கணபதிப்பிள்ளை
திருமதி வி. அரியக்குட்டி
கலாநிதி கே. மகாலிங்கம்
திரு. தி. நடேஸ்வரன்
50 ஆண்டுகளுக்கு முன்
பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்
திருமதி ஸ்ரீரஞ்சனி விஷ்ணுகாந்தன்
செல்வி சற்சொரூபவதி நாதன்
12.02.1966ல் நடந்த நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்
திரு. சிவசோதி வள்ளிபுரம்
திரு அப்பாத்துரை விநாயகமூர்த்தி

# 3. மாமன்றத்தின் குறிக்கோள்கள்

மாமன்ற அமைப்பு விதிகளில் கூறப்பட்டுள்ள பின்வரும் பிரதான குறிக்கோள்களை எய்திட மாமன்றம் தன்னாலான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் எடுத்து வந்திருக்கிறது.

01. இந்து தர்ம அறிவினையும் சாதனையையும் விருத்தி செய்தல்
02. இந்து கலாச்சாரத்தையும் கல்வியையும் விருத்தி செய்தல்
03. இந்து சமய ஸ்தாபனங்கள், ஆலயங்கள், சமூகநல முக்கியத்துவம் வாய்ந்த புராதன நிலையங்கள் முதலியவற்றை அமைத்தல், பேணுதல், காத்தல், புதுப்பித்தல்.
04. இந்து ஸ்தாபனங்களைப் பலமடையச் செய்வதோடு அவற்றிற்கிடையே அந்நியோன்யத்தையும் ஐக்கியத்தையும் வளரச்செய்தல்
05. இந்து சமய அர்ச்சகர்களுக்கு வேதாகம, தத்துவ, சாஸ்திர, மொழி அறிவும் பயிற்சியும் அளிக்கும் பொருட்டுச் சமய சாஸ்திரக் கல்லூரியை நிறுவுதல்
06. இந்து சமூகத்தினரின் நலன்களைப் பாதுகாத்தலும், பொதுவில், காலத்திற்குக் காலம் அறிவுரைகளை வழங்குதலும்.
07. இந்துக்களின் அக்கறைகளுக்கு அல்லது நலன்களுக்கு அல்லது மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை அல்லது அவற்றின் எதையேனும் எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உசிதமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா விடயங்களையும் மேற்கொள்ளுதல்.

மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களுடன், இந்து மக்களின் பிரச்சினைகளுக்கு அல்லது நலன்களுக்கு முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டியநிலை தொடர்வதால், ஏனைய நோக்கங்களில் கூடிய கவனம் செலுத்தமுடியவில்லை. எனினும் எமது வெளியீடுகள், கல்விக் குழுவின் பணிகள், சிவதொண்டரணியின் ஆன்மீகக் கருத்தரங்குகள், பாடசாலைகளில் சிவதொண்டரணியை நிறுவுதல் என்பன மூலம் மாமன்றம் மேற்குறிப்பிட்ட விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றது. முக்கியமாக நடுத்தீர்ப்பு நிலையத்தை அமைத்தமை ஒரு முக்கிய முயற்சியாகும். இது இந்து மக்கள் மிகவும் அக்கறையுடன் வரவேற்ற பணியாகும். ஆனால் இதன் செயற்பாட்டைப் பயன்படுத்த ஆலய அறங்காவலர்கள் இன்னமும் முன்வராதது கவலைக்குரிய விடயம். ஆலயப் பிணக்குகளை நீதிமன்றம் வரை கொண்டுசென்று கால விரையத்தையும் பண விரையத்தையும் தவிர்த்து, ஒன்றுகூடிப்பேசி நாமே எமக்குள்ளான பிணக்குகளைத்தீர்க்கும் ஓர் சிறந்த அமைப்பாக நடுத்தீர்ப்பு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. அத்தகைய சிறந்த அமைப்பினைப் பயன்படுத்திப் பிணக்குகளைத் தீர்க்க அனைவரும் முன்வரவேண்டும்.

# 4. மாமன்ற முகாமை

**முகாமைப்பேரவை**

விளம்பி வருடம் மார்கழித் திங்கள் 22ம் நாள் (06-01-2019) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி தொடக்கம் மாமன்றத் தலைமையக மண்டபத்தில் மாமன்றத் தலைவர் திரு. மா. தவயோகராஜா தலைமையில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சகல பேராளர்களும் கௌரவ மற்றும் சிறப்பு உறுப்பினர்களும் உள்ளடங்கிய புதிய முகாமைப்பேரவை தெரிவு செய்யப்பட்டது. வருடாந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து நடந்த புதிய முகாமைப் பேரவையின் முதலாவது கூட்டத்தில் பின்வரும் பதவி தாங்குனர்கள் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

**1. நிறைவேற்றுக்குழு**

| | |
|---|---|
| தலைவர் | : திரு. மா. தவயோகராஜா |
| பிரதித் தலைவர் | : திரு. சி. தனபாலா |
| பொதுச் செயலாளர் | : திரு. வே. கந்தசாமி |
| பொருளாளர் | : திருமதி. அ. கயிலாசபிள்ளை |
| துணைத் தலைவர்கள் | : திரு. த. மனோகரன் |
| | : திரு. த. முத்துக்குமாரசாமி |
| | : திரு. மு. பவளகாந்தன் |
| | : திரு. எஸ்.ரி.எஸ். அருளானந்தன் |
| | : கலாநிதி ஆறு திருமுருகன் |
| | : திரு. அ. மாணிக்கவாசகர் |
| | : திரு. வே. சந்திரசேகரம் |
| | : சிவஸ்ரீ ம. பாலகைலாசநாதசர்மா |
| | : வைத்தியகலாநிதி மு. கதிர்காமநாதன் |
| பிரதிச் செயலாளர் | : திரு. நீலகண்டன் பிரணவன் |
| துணைச் செயலாளர்கள் | : திரு. ஜெ. நிரோஷ்காந்த் |
| | : திரு. சா. மதிசுதன் |
| துணைப் பொருளாளர் | : திரு. இ. .இராஜேந்திரம் (நாவலப்பிட்டி) |

**2. நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை**

அமைப்பு விதிகளின்படி சபையின் இளைப்பாறிய இரு உறுப்பினர்களான திருவாளர்கள் திரு. ஜீ.ஆர் பத்மராஜ், திரு. எஸ்.பி. சாமி ஆகியோர் மீண்டும் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையில் பின்வருவோர் நடப்பாண்டில் பணியாற்றி வருகின்றனர்:-

1. கலாநிதி க. கனக-ஈஸ்வரன் (ஜனாதிபதி சட்டத்தரணி) – தலைவர்
2. திரு. திருக்குமார் நடேசன்
3. திரு. ஜீ.ஆர் பத்மராஜ்
4. கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
5. திரு. எஸ்.பி. சாமி
6. திரு. க. பாலசுந்தரம்
7. மாமன்றத் தலைவர் (பதவிவழி)
8. மாமன்றப்பிரதித் தலைவர் (பதவிவழி)
9. மாமன்றப் பொதுச் செயலாளர் (பதவிவழி ரீதியில் சபையின் செயலாளராகவும் இயங்குவார்)
10. மாமன்றப் பொருளாளர் (அழைப்பின்பேரில்)

**3. கௌரவ உறுப்பினர்கள்**

பின்வருவோர் மாமன்ற கௌரவ உறுப்பினர்களாக இருக்கின்றனர்:-

1. வணக்கத்திற்குரிய அக்ஷராத்மானந்த சுவாமி
2. வணக்கத்துக்குரிய ரிஷி தொண்டுநாத சுவாமிகள்
3. நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்

4. பேராசிரியர் சி. பத்மநாதன்
5. பேராசிரியர் பா. கோபாலகிருஷ்ண ஐயர்
6. கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
7. திரு. தே.ம. சுவாமிநாதன்
8. திரு. சீ. யோகேஸ்வரன் (பா.உ)
9. திரு. சு. சத்தியமூர்த்தி
10. கலாநிதி க. கனக-ஈஸ்வரன் (ஜனாதிபதி சட்டத்தரணி)
11. திரு. மா. தவயோகராஜா
12. திரு. வே. கந்தசாமி
13. திருமதி அ. கயிலாசபிள்ளை
14. திரு. சின்னத்துரை தனபாலா
15. திரு. திருக்குமார் நடேசன்
16. திரு. நீலகண்டன் சரவணன்
17. கலாநிதி ஆறு. திருமுருகன்
18. கலாநிதி சிவஸ்ரீ ம. பாலகைலாசநாதசர்மா

**4. சிறப்பு உறுப்பினர்கள்**

பின்வருவோர் மாமன்ற சிறப்பு உறுப்பினர்களாக இருக்கின்றனர்:-

1. பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்
2. பேராசிரியர் அ. சண்முகதாஸ்
3. திரு. எஸ். சுப்பிரமணியம் செட்டியார்
4. கலாநிதி க. நாகேஸ்வரன்
5. திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
6. திருமதி சாந்தி நாவுக்கரசன்
7. மருத்துவர் சி. குகதாசன்
8. சிவஸ்ரீ ந. சதாசிவஐயர்
9. திருமதி கோதை நகுலராஜா
10. திரு. கி. புண்ணியமூர்த்தி
11. திருமதி வானதி ரவீந்திரன்
12. திரு. ஜீ. ஆர். பத்மராஜ்
13. திரு. க. பாலசுந்தரம்
14. திருமதி ச. முருகானந்தன்
15. கலாநிதி த. முத்துக்குமாரசாமி
16. சிவஸ்ரீ கு.வை.க. வைத்தீஸ்வரக்குருக்கள்
17. பேராசிரியர் மா. வேதநாதன்
18. திருமதி ஹேமா சண்முக சர்மா
19. திரு. அ. உமாமகேஸ்வரன்
20. திரு. எஸ். புண்ணியசீலன்
21. திரு. எஸ். முத்துசாமி (கொட்டகல)
22. திரு. க. விவேகானந்தன்
23. திரு. S. லலீசன்
24. திருமதி. சாந்தி கேசவன்
25. திரு. ஐ.தி. சம்பந்தன் - UK
26. திரு. பார்த்திபன் - அவுஸ்திரேலியா
27. திரு. S. ரமணராஜா
28. திரு. அ. கந்தசாமி (UPS)

**5. குழுக்கள்**

மேற்படி ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் பின் புதிய முகாமைப் பேரவையால் பின்வருவோர் குழுக்களின் தலைவர்களாகவும் செயலாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்:-

**1. சமய விவகாரங்கள், விழாக்கள், குருகுலம், உறுப்பாண்மை**

திரு. த. முத்துக்குமாரசாமி - தலைவர்
திரு. கா. இராஜ்மோகன் - செயலாளர்

**2. கட்டிடம்**

திரு. சி.த.சி. அருளானந்தன் - தலைவர்
திரு. சி. சிவஞானம் - செயலாளர்

**3. விடுதிகள்**

திருமதி. அ. கயிலாசபிள்ளை - தலைவர்
திருமதி. ச. முருகானந்தம் - செயலாளர்

**4. கல்வி**

திரு. மா. கணபதிப்பிள்ளை - தலைவர்
திரு. த. மனோகரன் - செயலாளர்

**5. சமூக நலன்**

திரு. சி. தனபாலா - தலைவர்
திரு. ஜெ. நிரோஷ்காந்த் - செயலாளர்

**6. வெளியீடுகள்**

கலாநிதி. ஆறு திருமுருகன் - தலைவர்
திரு. வே. கந்தசாமி - செயலாளர்

**7. நிதி**

திரு. மா. தவயோகராஜா - தலைவர்
திருமதி. அ. கயிலாசபிள்ளை - செயலாளர்

**8. சிவதொண்டர் அணி & நூலகம்**

மருத்துவர் மு. கதிர்காமநாதன் - தலைவர்
திரு. க. இரகுநாதன் - செயலாளர்

**9. அமைப்பு விதிகள் திருத்தம்**

திரு.மா.தவயோகராஜா - தலைவர்
திரு. வே.கந்தசாமி - செயலாளர்

**10. சர்வதேச தகவல் தொடர்புக்குழு**

திரு. மா. தவயோகராஜா - தலைவர்
திரு. தி. சனகன் - செயலாளர்

**10. யாழ். பணிமனை மற்றும் நடவடிக்கைக் குழு**

மாமன்றத் தலைவர் - தலைவர்
கலாநிதி ஆறுதிருமுருகன் - செயலாளர்

.

**6. மாமன்றக் கூட்டங்கள்**

06-01-2019ந் திகதி நடைபெற்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து 10-11-2019 வரை

03 முகாமைப் பேரவைக் கூட்டங்கள்

01 செயற்குழுக் கூட்டம்

என்பன நடைபெற்றன. கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டபடி மாமன்றத்தின் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

# 5. நிதி நிர்வாகமும், ஆதனங்களும் பற்றிய ஒரு கண்ணோட்டம்

### (i) நிதி நிலைமை

**31.03.2019** இல் நிறைவெய்திய நிதி ஆண்டுக்கான, கணக்காய்வாளர்களால் பரிசீலித்து அத்தாட்சிப்படுத்திய நிதிக் கணக்கறிக்கை வழமை போல் ஆண்டறிக்கையின் இறுதிப் பகுதியில் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

தலைமைக் கட்டிடம் மூலம் கிடைக்கும் வாடகை வருமானமும் “மொபிடெல்” மற்றும் “ஹச்” தொலைத் தொடர்பு கோபுரங்களிலிருந்து கிடைக்கும் அனுமதிக்கட்டணம், மனிதநேயநிதியம், மற்றும் ஏனைய கொடையாளிகள் ஆகியோர் வழங்கும் நன்கொடைகளாலும் எமது ஆன்மீக, சமூக நலன், கல்வி போன்ற பணிகளையும் ஏனைய சேவைகளையும் மேலெடுத்துச் செல்லமுடிகின்றது.

மாமன்றத்தின் நிர்வாகம் கடந்த பல வருடங்களாக ஏற்படுத்திய நம்பிக்கையுணர்வும், நாணய மதிப்பீடும் தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதை எமது கணக்கறிக்கை பிரதிபலிக்கின்றது. மாமன்றம் வழங்கும் நிதிக் கொடுப்பனவுகளை முறையாக நெறிப்படுத்திக் கவனமாக ஆராய்ந்து நிர்வகித்து வருகிறோம் என்ற திருப்தியுடன் எமது பணிகளைத் தொடர்கின்றோம். எமது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் வழிகாட்டலையும், அறிவுரைகளையும் மெச்சுகிறோம்.

மேலும் எமக்குக் கிடைக்கும் நன்கொடைகள், நூல்களுக்கான பங்களிப்புகள், தலைமையகக் கட்டட வாடகை மற்றும் தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்கான அனுமதிக்கட்டணம் என்பவற்றில் எமது செலவுகள் தவிர்ந்த மிகுதிகளை நிலையான வைப்பிலிட்டுள்ளோம். இவ்வகையில் 23.5 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

இதைவிடப் பின்வரும் வங்கிக் கடன்முறிகளிலும் முதலிட்டுள்ளோம்.

**இலங்கை வங்கியில் ரூபா 10,000,000/- பெறுமதியான (100/- X 100,000 முறிகள்)**

இவற்றின் மூலம் கிடைக்கப்பெறும் வட்டிகள், வாடகை என்பனவும் எமது சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இவற்றிற்கு மேலாக, அவுஸ்திரேலியா, சிட்னியைச் சேர்ந்த திரு திருமதி தங்கராஜா ஆகியோரால் நன்கொடையாக வழங்கப்பட்ட 1,000,000 ரூபாவானது 100/- X 10,000 முறிகளாக கொமர்ஷல் வங்கியில் வைப்பிலிடப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வட்டி வருமானம் வன்னியில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மாணவர்களின் கல்வித் தேவைகக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

## ஆதனங்களும் சொத்துக்களும்



### (ii) தலைமையகக் கட்டிடம்

கடந்த ஆண்டறிக்கைகளில் குறிப்பிட்டதுபோல், கொழும்பு சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தையில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து 99 வருடங்கள் குத்தகையில் பெறப்பட்ட 38 பேர்ச் விசாலமான காணியில் அமைக்கப்பட்டுள்ள 6 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தில் 5ஆம் மாடியில் மாமன்றத்தின் பிரார்த்தனை மண்டபமும் தலைமையகமும் அமைந்துள்ளது. ஏனைய மாடிகள் “மக்கள் வங்கி”க்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

“மொபிரெல்” நிறுவனத்திற்கு இந்து மாமன்றக் கட்டிடத்தின்மீது கோபுரம் அமைப்பதற்காகச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி அந்நிறுவனத்திடமிருந்து அனுமதிக்கட்டணம் கிடைத்து வருகிறது.

இது போல் “ஹச்சிசன் ரெலிகொம்” நிறுவனத்திடமிருந்தும் மாமன்றக் கட்டிடத்தின் மீது கோபுரம் அமைக்க, செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மூலம் அனுமதிக்கட்டணம் பெறப்படுகின்றது.

### (iii) யாழ்ப்பாணம் நல்லூரில் இருக்கும் சொத்து



நல்லூரில், கோவில் வீதியில் அமைந்திருக்கும் 2.09 நிலப்பரப்பு விஸ்தீரணமான, அமரர் திரு. பேரம்பலம் அவர்களுக்குச் சொந்தமான காணியானது அமரர் திருமதி. விஜயலட்சுமி பேரம்பலம் அவர்களால் நன்கொடையாகத் தரப்பட்டது. அந்தக் காணியில் சைவவித்தகர் பயிற்சி நிறுவனமும், இந்து ஆராய்ச்சி நிலையம், நூலகம் உட்பட மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றை மாமன்றம் அமைத்துள்ளது. அக்காணியில் கட்டப்பட்ட கட்டிடத்தின் கேட்போர் கூடத்திற்குப் பேரம்பலம் கேட்போர் கூடம் எனப் பெயரிட்டிருக்கிறோம்.இங்கு இயங்கும் இந்து ஆராய்ச்சி நிலையத்தின் கௌரவ இயக்குநராக கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் செயற்படுகின்றார். அமரர்கள் திரு. திருமதி. பேரம்பலம் அவர்கள் செய்த பெரும் நன்கொடைக்கு என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

### (iv) இரத்மலானை சக்தி இல்லம்

இரத்மலானையில் மாமன்றம் கொள்வனவு செய்த விசாலமான காணியில் அமைந்துள்ள கட்டிடத்தில் இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரியில் படிக்கும் வசதியற்ற மாணவர்களுக்காக சக்தி இல்லம் என்ற விடுதி மாமன்றத்தால் நடாத்தப்பட்டுவருகிறது. இங்கு தங்கியுள்ள மாணவர்களுக்காகப் படிப்பு மண்டபம், உணவு அறை, சமையலறை என்பன அமைக்கப்பட்டு, மாமன்ற விடுதிகள் குழுவால் பராமரிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு இலவசமாக விடுதி வசதிகளுடன் ஏனைய உதவிகளும் வழங்கப்பட்டு அவர்களை எமது பண்பாட்டுச் சூழலில் நாளைய வரலாறு போற்றவல்ல நல்ல பிரஜைகளாக வளர்த்து வருகின்றோம்.

### (v) இரத்மலானை செல்வா இல்லம்

இரத்மலானை பொறப்பனவீதி, முதலாம் ஒழுங்கையில் திரு, திருமதி. செல்வரத்தினம் ஆகியோரால் மாமன்றத்திற்கு நன்கொடையாகத் தரப்பட்ட 20 பேர்ச் காணியும் அங்கு அமைந்துள்ள வீடும் உபயோகமான முறையில் மாமன்ற விடுதிக் குழுவால் பாவிக்கப்பட்டு வருகிறது. மாணவர் விடுதியில் தங்கி க.பொ.த உயர்தர வகுப்பு பரீட்சை எழுதிவிட்டு வேறு துறைகளில் பயிற்சி பெறும் மாணவர்களும், முதியோர்களும் தங்குவதற்கு இது பெரும்பாலும் பாவிக்கப்பட்டு வருகிறது.

### (vi) கீரிமலையில் மடம்

எமது அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட 29 மில்லியன் ரூபா பெருநிதி மூலம் கீரிமலைச் சிவபூமியில் இரு தளங்களைக் கொண்ட மடம் ஒன்று 2014ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு யாத்திரிகர்களின் பயன்பாட்டிற்காக விடப்பட்டுள்ளது.

### (vii) திருமுறிகண்டியில் சரவணப்பொய்கை

அரசாங்கத்தால் எமக்கு வழங்கப்பட்ட காணித்துண்டில் சரவணப் பொய்கை என்ற பெயரில் எம்மால் அமைக்கப்பட்ட கட்டடத்தில் சரவணப் பொய்கையும், பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பப் பெண்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவும் வகையில் ஓர் உணவுச் சாலையையும் அமைத்துக் கொடுக்கும் பொருட்டு கட்டடத்தை நிர்மாணித்து வருகின்றோம்.



### (viii) திருக்கேதீச்சரத்தில் மடம்

ஆலயத்திற்குப் பின்புறமாக நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற காணியில் ஒருதளத்தைக் கொண்ட மடம் ஒன்றினை 2.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. திருக்கேதீச்சரத்தில் ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட மேற்குறித்த காணிக்கான தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் அனுமதியைப் பெறுவதில் தடங்கல்கள் உள்ள காரணத்தினால் அப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும் 2020ம் ஆண்டில் ஆலயத்தின் மகா கும்பாபிடேகத்தினை நடத்த உத்தேசித்துள்ள நிலையில் அங்கே இந்து மாமன்றத்தின் சார்பில் மடம் ஒன்றினை அமைக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து விரைவாக செயற்பட வேண்டியுள்ளது.







### (ix) மன்னாரில் இந்து மீனவர்களுக்கான இறங்குதுறை

மன்னாரில், பேசாலையில் மீன்பிடித் தொழில் செய்யும் இந்து மீனவர்களுக்கு அங்குள்ள மாற்று மதத்தவர்கள் தடைவிதித்தபோது, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, பேசாலை பிரதேச சபைக்குட்பட்ட, சிறுத்தோப்பு கிராமசேவகர் பிரிவில் உள்ளடங்கிய "பிறாஞ்சி பெரேரா காணி" என்ற 2 ஏக்கர் 27.2 பேர்ச் அளவுள்ள ஆதனம், மாமன்றத்தின் பெயரில் 22-11-2004ல் கொள்வனவு செய்யப்பட்டு இந்து மீனவர்களின் மீன்பிடி இறங்குதுறையாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது.



### (x) ஹற்றன் , கொட்டகலையில் காணி

ஹட்டன் - கெட்டகலையில், மலையக மக்களுக்காக, நுவரெலியா பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட டிம்புல கோரளைப்பற்றிலுள்ள கொட்டகலை எனும் இடத்தில் (அ) 37.91 பேர்ச் மற்றும் (ஆ) 36.67 பேர்ச் அளவுள்ள இரு காணித்துண்டுகள், அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் நண்பரும் வர்த்தகப்பிரமுகருமான திரு.எஸ்.முத்துசாமி அவர்களால் மாமன்றத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.



### (xi) ஒட்டுசுட்டானில் காணி

ஒட்டுசுட்டானில் மாமன்றப் பணிகளின் விரிவாக்கலுக்கென, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரினால் "காதலியார் சமணங்குளம்" என்னுமிடத்தில் 01 ஏக்கர் முடிக்குரிய காணி மாமன்றத்திற்கென ஒதுக்கப்பட்டு, பிரதேச செயலகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அக்காணிக்கான அனுமதிப்பத்திரத்தினைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### (xii) தொண்டைமானாற்றில் காணி நன்கொடை

தொண்டைமானாறு, "செம்பன்குன்றுவிற்குத் தெற்கு" என்ற 12 பரப்பு 4.312 குழி அளவுள்ள காணி, திருமதி நல்லலிங்கம் சந்தானம் அவர்களால் இந்து மாமன்றத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இதற்கான உறுதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் "நீலகண்டன் சக நீலகண்டன" சட்ட நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# 6. சமய நிகழ்வுகள்

மாமன்ற தலைமையக உச்ச மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கும், விநாயகப் பெருமான், முருகப் பெருமான் ஆகியோருக்குப் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நிவேதனப் பூசையும் விசேட தினங்களில் அபிடேகத்துடன் சிறப்புப்பூசைகளும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. ஆண்டுதோறும் நடராஜப் பெருமானுக்குரிய ஆறு அபிடேகங்கள் உட்படத் தைப்பொங்கல், புத்தாண்டு, தீபாவளி, விநாயகர் சஷ்டி, கந்தசஷ்டி, நவராத்திரி, ஆகிய முக்கிய தினங்களில் விசேட பூசைகளும் நடைபெறுகின்றன.

## (i) தைப்பொங்கல்

இறைவன் தனது திருவருட் சக்தியைச் சூரியன் மூலம் வழங்குகிறார் எனவும் அவரது பக்தர்கள் அதன் மூலம் நன்மையைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதையும் நாம் அறிவோம். முக்கியமாக இதை உழவர் திருநாள் என கொண்டாடுகின்றோம். எனவே சூரியன் வடிவில் நம்மைக் காக்கும், உதவி புரியும் இறைவனுக்கு இத் தைப்பொங்கல் திருநாளன்று புத்தரிசிப் பொங்கல் பொங்கிப்படைத்து எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே அனைத்து இந்துக்களும் இத் தைப்பொங்கல் திருநாளை இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஒரு நாளாக நினைவில் வைத்துப் பக்தியுடன் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.

தைப்பொங்கல் தினமாகிய 15-01-2019 அன்று மாமன்றத்தில் பொங்கல் நிகழ்வோடு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு விசேட அபிடேகமும் பூசையும் நடைபெற்றது. மாமன்ற தலைவர் திரு. மா. தவயோகராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற பொங்கல் மற்றும் பூசை நிகழ்ச்சிகளில், பொதுச் செயலாளர், பொருளாளர் உட்பட அங்கத்தவர் பலரும் கலந்து கொண்டனர்.

## (ii) மகா சிவராத்திரி

இந்துக்களின் விரத நாட்களில் மகாசிவராத்திரி விரதம் சிறப்பைப் பெறுகிறது. இந்துக்கள் அனைவரும் அன்றைய தினம் விரதம் இருந்து, இரவு கண்விழித்து நான்கு சாமப் பூசைகளையும் அனுட்டித்து இறை கடாட்சத்தைப் பெறுவர்.

கடந்த 04-03-2019 அன்று, மாமன்றத் தலைமையகத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் சன்னிதியில் நான்கு சாமப் பூசைகளும், லிங்கோற்பவர் காலத்தில் நடராஜப் பெருமானுக்கும் சிவலிங்கத் திருமேனிக்கும் சிறப்பான அபிடேகமும் இடம்பெற்றது. இரத்மலானை, சக்தி இல்ல மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்றது. மகாசிவராத்திரியை முன்னிட்டு இந்து ஒளி சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

### பொலனறுவையில் மகாசிவராத்திரி

புராதனமானதும், வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமான பொலநறுவை சிவன் கோயிலில் 04-03-2019 அன்று, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பூரண அனுசரணையில், சமன்பிட்டி அன்னை ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலை, சமன்பிட்டி காமதேனு இந்துசமய வளர்ச்சி மன்றம் என்பவற்றின் ஒழுங்கமைப்பில் காலை 10.00 மணிமுதல் பூசை வழிபாடுகள், கூட்டுப் பிரார்த்தனைகளுடன் மகாசிவராத்திரி வழிபாடுகள் இடம்பெற்றன. இதற்காக மாமன்றம் ரூபா 250000/- ரூபாவினை நிதியுதவியாக வழங்கியது.

## (iii) விநாயகர் சதுர்த்தி மற்றும் விநாயகர் சஷ்டி விரதம்

அகில இலங்கை இந்து மாமன்றப் பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானுக்கு 2019ம் ஆண்டுக்கான விநாயக சதுர்த்தி அபிடேக பூசைகள் 02-09-2019 அன்று இடம்பெற்றது.

விநாயகர் சஷ்டி விரதமானது எதிர்வரும் 01-01-2020 அன்று நிகழ்வுள்ளது. விநாயகர் சஷ்டி தினத்தன்று விரதமிருந்து ஆனைமுகனைப் பூசிப்பது அல்லல்களைப் போக்குமெனவும், விநாயகர் அருளால் விரும்பியவை கிட்டுமெனவும் புராணங்கள் கூறுகின்றன.

திரு. டப்சி கனகரத்தினம் அவர்களின் உபயமாக இடம்பெற்றுவருகின்ற விநாயகர் சதுர்த்தி மற்றும் விநாயகர் சஷ்டி அபிடேகங்களிற்கு மாமன்ற அங்கத்தவர்களும் எமது கட்டடத்தில் இயங்கும் மக்கள் வங்கியின் ஊழியர்களும் வருகை தந்து வழிபாடாற்றுவர்.

## (iv) மார்கழித் திருவாதிரை

திருவெம்பாவை, மார்கழித் திருவாதிரைக்கு முன்வரும் ஒன்பது தினங்கள் நடைபெறும் சிவனுக்குரிய மிகச்சிறப்புவாய்ந்த தினங்கள் இவை. திருவாதிரையோடு சேர்த்துப் பத்து நாட்களும் சிவ வணக்கத்திற்கும்

திருவாசகம் ஓதுவதற்கும் மிகச் சிறந்த நாட்களாகும். திருவாதிரை சிவபெருமானுடைய நட்சத்திரமுமாகும். 2019ம் ஆண்டுக்குரிய திருவாதிரை அபிடேக பூசைகள் எதிர்வரும் 10-01-2020 அன்று நடைபெறும். மாமன்றத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு விசேட அபிடேக, ஆராதனை, பூசைகள் என்பன, மறைந்த, மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் குடும்பத்தினர் உபயமாக இடம்பெறுவதுடன், மார்கழித் திருவாதிரையின்போது மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பலரும் கலந்து கொள்வர்.

### (v) மாமன்றத்தில் நடைபெற்ற விசேட அபிடேகங்கள்

இந்துக்களின் சிறப்புத் தினங்களையொட்டி இந்து மாமன்றத்தில் விசேட அபிடேகத்துடன் பூசைகளும் நடைபெற்றன. இதில் மாமன்றத் தலைவர், பிரதித் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் உட்பட முகாமைப் பேரவை உறுப்பினர்கள் பலரும் பங்கு பற்றினர்.

இவ்வகையில், இவ்வருடம் பின்வரும் தினங்களில் விசேட அபிடேகங்கள் இடம்பெற்றன.

அ. மாசித்திங்கள் 06ம் நாள் (18-02-2019) வளர்பிறை சதுர்த்தி நடேசர் அபிடேகம், திருமதி அ.கயிலாசபிள்ளை குடும்பத்தினரின் உபயமாக நடைபெற்றது.

ஆ. சித்திரைத்திங்கள் 01ம் நாள் (14-04-2019) விகாரி வருடப்பிறப்பு விசேட பூசை வழிபாடு இந்து மாமன்றத்தின் உபயமாக நடைபெற்றது.

இ. சித்திரைத்திங்கள் 07ம் நாள் (20-04-2019) சித்திரை சுவாதி அன்று மாமன்ற வருடாபிஷேகம் இந்து மாமன்ற உபயமாக நடைபெற்றது.

ஈ. சித்திரைத்திங்கள் 14ம் நாள் (27-04-2019) சித்திரைத் திருவோண நட்சத்திரத்தில் நடேசர் அபிடேகம், தலைவர் மா.தவயோகராஜா அவர்களின் உபயமாக நடைபெற்றது.

உ. ஆனித்திங்கள் 23ம் நாள் (08-07-2019) ஆனி உத்தர நடேசர் அபிடேகம், திரு.க.ஜெகதீசன் அவர்களின் உபயமாக நடைபெற்றது.

எ. ஆவணித்திங்கள் 26ம் நாள் (12-09-2019) பூர்வபக்க சதுர்த்தி அபிடேகம், திரு.பொன். விமலேந்திரன் அவர்களின் உபயமாக நடைபெற்றது.

ஏ. புரட்டாதித்திங்கள் 25ம் நாள் (12-10-2019) பூர்வபக்க சதுர்த்தி அபிடேகம், திரு.சி.தியாகராஜா (STR) அவர்களின் உபயமாக நடைபெற்றது.

### (vi) மாமன்றத்தால் நடத்தப்பெற்ற குருபூசைகள்

சமயகுரவர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் சுவாமிகள் ஆகியோரது குருபூசைகளும் திருவடி வழிபாடுகளும், அகில இலங்கை இந்து மாமன்றமும் ஈழத்துத் திருநெறிக் கழகமும் இணைந்து, இந்து வித்தியாவிருத்திச சங்கத்தின் அனுசரணையுடன் பம்பலப்பிட்டி சரஸ்வதி மாண்டபத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. 2019ம் வருடத்திற்கான குருபூசைகள் தினங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| **திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை** | **வைாசி மூலம்** | **வைகாசித்திங்கள் 07ம் நாள் (21-05-2019)** |
| **மாணிக்கவாசகர் நாயனார் பூசை** | **ஆனி மகம்** | **ஆனித்திங்கள் 21ம் நாள் (06-07-2019)** |
| **சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை** | **ஆடிச் சுவாதி** | **ஆடித்திங்கள் 22ம் நாள் (07-08-2019)** |

கடந்த ஏப்ரல் 21ம் திகதி நாட்டின் சிலபகுதிகளில் இடம்பெற்ற அசாதாரண நிலையினைத் தொடர்ந்து, 29-04-2019 அன்று நடத்தப்படவேண்டிய திருநாவுக்கரசுநாயனார் குருபூசை தினமானது நடத்தப்படவில்லை. ஏனைய மூன்று குருபூசைத் தினங்களுக்குமான நன்கொடையாக 25000 ரூபா, ஈழத்துத் திருநெறிக் கழகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

# 7. கல்விக்குழு

ஒவ்வொரு பிள்ளையும் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் உரிமை கொண்டது என்பது சிறுவர் தொடர்பான சர்வதேச சாசனத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. நாளைய சமுதாயத்தின் நலனில் கவனம் செலுத்தும் போது கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டியது கட்டாயமானது. கல்வித் துறையில் நிலவும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டிச் சீர்செய்ய வேண்டியது சமுதாயப் பொறுப்பு.

அந்த வழியிலே அகில இலங்கை இந்து மாமன்றக் கல்விக்குழு கடந்த காலங்களில் இந்து சமய பாடம் தொடர்பில் காட்டிய ஆர்வத்தைத் தற்போது இந்துப் பிள்ளைகளின் முழுக் கல்விக்குமாக விரிவுபடுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் இந்து சமய பாடத்தையும், இந்து நாகரிக பாடத்தையும் இலக்காகக் கொண்டு நாடளாவிய ரீதியில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மற்றும் (உயர்தர) வகுப்புக்களில் குறித்த பாடங்களைப் பயின்று பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவ மாணவியரின் நலன்கருதிய பயிலரங்குகள் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டதுடன் குறித்த பாட ஆசிரியர்களை வலுவூட்டுமுகமாகப் பாடத்துறையில் தகைமைகொண்ட வளவாளர்கள் ஊடாகச் செயலமர்வுகளும் நடத்தப்பட்டன.

இலங்கையிலுள்ள பல இடங்களிலும் இவ்வாறான பயிலரங்குகளும், செயலமர்வுகளும் கடந்த முப்பது வருடங்களாக நடத்தப்பட்டு அதன் மூலம் பங்குபற்றியோர் பலனடைந்துள்ளமையும் அறிக்கையிடப்பட்டுள்ளது. மாணவ, மாணவியர் மத்தியிலும் ஆசிரியர்கள் மற்றும் சமூக நலன்விரும்பிகள் மத்தியிலும் மாமன்றத்தின் கல்விப் பணிகளால் வரவேற்பும் கிடைத்துள்ளது. பலநூறு இந்துப் பிள்ளைகள் பயனடைந்துள்ளனர்.

புத்தளம், எட்டியாந்தோட்டை, உடப்பு, சிலாபம், கோகாலை, தெரணியகல, புலத்கொஹூபிட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த 400 வரையிலான மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்து சமயம் மற்றும் இந்து நாகரிக பாடங்களுக்கான செயலமர்வுகள் இந்த ஆண்டு நடத்தப்பட்டன. அம் மாணவர்களுக்கான முழுமையான செயலமர்வுகளாக இவை அமைந்ததுடன் அவர்களுக்குத் தேவையான வினாப்பத்திரங்கள் அடங்கிய கைநூல்களும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தர வகுப்புக்குரிய இந்து நாகரிக பாடத்திற்கான பாடத்திட்டத்திற்கிசைவான பாடநூலொன்று இல்லாத குறை “இந்து நாகரிகம்” என்ற நூலை மாமன்றக் கல்விக் குழு தொகுத்து வெளியிட்டதன் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. அந்நூல் பல தரப்பினரினதும் பாராட்டைப் பெற்றுள்ளதுடன் இளங்கலைமானி, தர்மாசிரியர் உட்பட்ட பரீட்சைகளுக்கான பாடநூலாகவும் கொள்ளப்பட்டுள்ளதையும், அதேபோல் பல்கலைக்கழக மட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையும் பெருமைக்குரியதாயமைந்துள்ளது. இந்நூலைத் தற்போது அமைக்கப்பட்டிருக்கும் புதியபடத்திட்டத்தின் அடிப்படையில் மேலும் மெருகூட்டுவதற்கான தேவையைக் கருத்திற் கொண்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எதிர்காலத்தில் இந்து சமய பாடத்துடன் நமது பிள்ளைகளின் கல்வி நலன், தேவை கருதி கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரணதரம் வரையான கட்டாய பாடங்களான தமிழ் மொழியும் இலக்கியமும், வரலாறு, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுடன் அழகியல் மற்றும் தொழில்நுட்பப் பாடங்களுக்கான செயலமர்வுகளையும், ஆசிரியர்களுக்கான பயிலரங்குகளையும் ஒழுங்கு செய்யக்கூடியதாக வழிமுறைகளை வகுத்துச் செயற்படுத்துவதும் கல்விக் குழுவின் நோக்கமாகும். இதனால் மாமன்றத்தின் பணி சகல இந்துத் தமிழ்ப் பிள்ளைகளையும் சென்றடைய வழி ஏற்படும். அச்செயற்பாடு பெற்றோர் மத்தியிலும் வரவேற்பைப்பெறும்.

பாடசாலைகளில் தேவையான பௌதிக வளங்கள், ஆசிரிய ஆளணி, இலவச பாடநூல்கள், இலவசச் சீருடை என்று கல்வித்துறைக்கு வழங்கப்பட்டுள்ள பல வசதிகள் தமிழ் பாடசாலைகளுக்கு முறையாகக் கிடைக்கின்றனவா என்பதில் கவனம் செலுத்த வேண்டியது கல்வி நலன்சார் ஆர்வலர்களின் சமூகப் பொறுப்பாகும். அதையும் கல்விக்குழு கவனத்தில் கொண்டுள்ளது. அந்த வகையிலே நாடளாவிய ரீதியில் தமிழ்க்கல்வியில் சமத்துவ நிலை பேணப்படுகின்றதா என்பதை ஆராய்வதும் நிவாரணம் தேடுவதும் நமது பொறுப்பாகவுள்ளது.

கட்டாய பாடங்களிலொன்றான வரலாற்றுப் பாடத்தில் இலங்கையின் யாழ்ப்பாணத் தமிழரசு, வன்னித் தமிழரசு, அவற்றை ஆட்சி செய்த மன்னர்கள், ஆட்சி முறைமை போன்றவை மறைக்கப்பட்டுள்ளமையை கல்விக்குழு சுட்டிக்காட்டியதன் பெறுபேறாக அது உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு எதிர்காலத்தில் தமிழர் வரலாறும் வரலாற்றுப் பாடத்தில் இடம்பெறுவதற்குக் கல்வியமைச்சால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மொழி மற்றும் இந்து சமயப் பாடங்களிலுள்ள குறைபாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது. பாடநூல்களில் காணப்படும் எழுத்து-கருத்து வழுக்கள் தொடர்பில் பலமுறை சுட்டிக்காட்டப்பட்டது. பிழையான புத்தகங்கள் மூலம் கற்கும் மாணவர்களுக்குப் பிழையான அறிவே சென்றடையும் என்பதைக் கருத்திற்கொண்டு, தற்போது அவ் வழுக்களைச் சரிசெய்து மாணவர்களுக்கான புதிய பாடநூல்களை அச்சிட்டு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டிலுள்ள இருபத்தைந்து மாவட்டங்களிலும் இன்று 98 கல்வி வலயங்கள் உள்ளன. எதிர் காலத்தில் அவை 150 ஆக அதிகரிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு கல்வி வலயத்திலும்-அதாவது தமிழ்ப்பாடசாலைகள் அடங்கிய கல்வி வலயத்திலும் ஒரு கல்வி ஆலோசனைக் குழுவை உருவாக்கி அதனை மாவட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் ஒருங்கிணைப்பதும், அவ்வாறு மாகாண மட்டத்திலுள்ள ஒன்பது கல்விக் குழுக்களை ஒரு மத்திய கல்வி ஆலோசனைக் குழுவாக நிறுவி அதன் அவதானிப்புக்கள், கருத்துக்களைப் பெற்றுச் செயற்படுவது உசிதமாகும். நாட்டிலே தமிழர் கல்வியைக் கண்காணிக்கும், குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் அமைப்பொன்றின் தேவையை மிகவிரைவில் எம்மால் நிறைவுசெய்ய முடியும் என்ற நம்பிக்கையுண்டு. இது தமிழர் கல்வியில் ஆர்வமுள்ளோரின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. அந்த வகையில், மாமன்றத்தின் கல்விக்குழுவினால் மாவட்டந்தோறும் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருந்த துணைக்குழுக்களின் வரிசையில் முதலாவதாக புத்தளம் மாவட்டத்தில் மாமன்றக் கல்விக்குழுவின் துணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா தமிழ்ப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களில் கற்றுவந்த ஊவா, சப்பிரகமுவ மாணவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டமை தொடர்பாகவும் கல்விக் குழு குரல் கொடுத்து வெற்றிகண்டது.

ஊவா, சப்ரகமுவ மாகாணங்களிலிருந்து, அம்மாகாணங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர கணித, விஞ்ஞான கற்கைநெறிகள் தமிழ் மொழி மூலமாகக் கற்பிக்கப்படாத காரணத்தினால், அம்மாகாண தமிழ் மாணவர்கள் நுவரெலியா மாவட்டப் பாடசாலைகளுக்குச் சென்று கல்விகற்று வந்தனர். இந்நிலையில், திடீரென, முறையான காரணங்களேதும் கூறப்படாமல் அம்மாணவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தார்கள். இச் செயலானது ஒரு அடிப்படை உரிமை மீறல் எனக்கருதிய மாமன்றம், இதற்கு நீதி நிவாரணம் பெறுவதற்காகப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டு, அம் மாணவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுத்தது.

நாட்டிலுள்ள அனைத்து இந்து தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு குறித்த பாட ஆசிரியர்களை வளப்படுத்தும் செயற்பாட்டையும் கல்வியமைச்சு மற்றும் மாகாண கல்வியமைச்சர்களின் அனுசரணையுடன் மேற்கொள்ளவும் கல்விக் குழு திட்டம் வகுத்துள்ளது. அதனடிப்படையில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தர மாணவ மாணவியருக்கு உதவு முகமாக தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமயம், வரலாறு ஆகிய ஐந்து பாடங்களுக்கான பாடத்திட்டத்தோடமைந்த வினாவிடைத் தொகுதிகள் அந்தந்தப் பாடத்துறையில் சிறப்புப்பெற்ற வளவாளர்களினை ஒருங்கிணைத்துத் தயாரிக்கப்பட்டுள்ளது.

கல்விக் குழுவின் பன்முகப் பணிகளின் மூலம் நமது பிள்ளைகள் உரிய, உயரிய பயனைப் பெறுவார்கள் என்பது எமது நம்பிக்கை. இந்நன்நோக்கத்திற்கு சகலரதும் ஆதரவும், ஒத்துழைப்பும் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 8. சமூகநலன் நடவடிக்கைகளும் வாழ்வாதார உதவிகளும்

### (i) மாமன்றத்தின் வெள்ள அனர்த்த நிவாரண உதவிகள்

இலங்கையின் வடபகுதியில், குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் கடந்த 2018, டிசம்பர் மாதம் சில தினங்களாகத் தொடர்ந்து பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட பெரும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த உடன்பிறப்புக்களுக்கு மாமன்றம், தனது நிவாரணப்பணிகளை வழமைபோல துரிதகதியில் ஆரம்பித்தது.

தலைமையகத்திலிருந்தும் யாழ்.பிராந்திய பணிமனையிலிருந்தும், இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் சரஸ்வதி மண்டபத்திலிருந்தும் செயற்பட்ட நிலையங்களினூடாக கொடையாளிகள் மனமுவந்து வழங்கிய பண மற்றும் பொருள் உதவிகள் சேகரிக்கப்பட்டு பொதிசெய்யப்பட்டன. ஒவ்வொரு பொதியிலும் உலர் உணவுப் பொருட்களும், போர்வைகள், பாய், மற்றும் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தது.

நிவாரண விநியோகப்பணிகள் யாழ்ப்பாண அலுவலகத்தினூடாக கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் தலைமையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மற்றும் யாழ்ப்பாணத்தின் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகள் என, தேவையான இடங்கள் கண்டறியப்பட்டு விரைவாக நடைபெற்றது.

பொதியிடல் மற்றும் விநியோகப் பணிகளில் தமது சரீர உதவிகளை வழங்கியிருந்த, யாழ்.பணிமனை உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவதொண்டர் அணி மாணவரகள் ஆகியோருககும், நிவாரணப் பணிக்கென பண, பொருள் உதவிகளை வழங்கியிருந்த கொடையாளிகள் ஒவ்வொருவருக்கும் மாமன்றம் தனது மனமுவந்த நன்றியைத் மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றது.

### (ii) சட்ட உதவிகள்

சிறைக்கைதிகளுக்கான மனிதாபிமான உதவிகள் விசாரணையின்றிச் சிறைகளில் வாடும் தமிழ்க் கைதிகளுக்கு மனிதாபிமான உதவிகளை மாமன்றம் முன்னின்று செய்து வருகின்றது. கைதிகளின் விடுதலை

பற்றியும் சட்ட நடவடிக்கைக்கு உதவும் முகமாகவும் சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசித்து அதற்கான செலவையும் மாமன்றம் ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த அடிப்படையில் வழக்கு இல 891/2002 ற்காக 15-02-2019ல் சட்டத்தரணிகள் திரு.அனில் சில்வா மற்றும் திரு.கே.வி.கணேசராஜா ஆகியோருக்கு 735,000/- சட்டக்கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

எவ்வித வழக்குகளையும் எதிர்நோக்காது சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளுக்கு இந்துக்களின் புனித நாட்களான தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரைப்பூரணை, சித்திரைவருடப்பிறப்பு, ஆடிஅமாவாசை, நவராத்திரி, கந்தசஷ்டி போன்ற தினங்களுக்குப் பூசைப்பொருட்கள், பொங்கல் சாமான்கள் உட்பட, விரதமிருப்போருக்குப் பாரணைக்காகச் சமைத்த உணவு வழங்குதல் போன்றவற்றை மாமன்றம் கூடிய சிரத்தையுடன் மேற்கொண்டு வருகின்றது. அவர்கள் சிறையிலிருந்தாலும் எமது சமய அனுஷ்டானங்களைத் தவறாது, இயலுமானவரை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதில் இந்து மாமன்றம் மிகவும் அக்கறையாகவுள்ளது.

**10-11-2019 வரையான சமூகநலன் நடவடிக்கைகளும் வாழ்வாதார உதவிகளும் விரிவாகத்தரப்பட்டுள்ளன :-**

1. 05-07-2019 - முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி என்பவரது கோரிக்கைக்கு அமைய அவரது பிள்ளைகளின் கல்வி உதவித்தொகையாக 10000/- வழங்கப்பட்டது.

2. 21-10-2019 – கல்முனை, சிவநெறி அறப்பணி மன்றம் பிரதேச செயலகத்துடன் இணைந்து இனங்கண்ட 20 பயனாளிகளுக்கு 205000/- வாழ்வாதார உதவித்தொகையாக பகிர்ந்தளிக்கப்பட்டது.

3. 06-11-2019 – ஆலையடிவேம்பு பிரதேச இந்து மன்றம், பிரதேச செயலகத்துடன் இணைந்து இனங்கண்ட பயனாளி திருமதி சூரியகலா என்பவருக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 29440/- பெறுமதியான தையல் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

4. 14-11-2019 – முள்ளியவளை, முல்லைத்தீவைச் சோர்ந்த திருமதி.கு.சுமதி அவர்களின் வாழ்வாதார உதவியாக 25 பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவு செய்வதற்கு 25000 ரூபா வழங்கப்பட்டது.

(iii) **வைத்திய உதவிகள்**

**01.** 21-10-2019 – மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சிபாரிசுக்கமைய சிறுநீரகங்கள் செயலிழந்த திரு.ச.வித்தியானந்தன் என்பவருக்கு மருத்துவ உதவித் தொகையாக 10000/- வழங்கப்பட்டது.

# 10 வெளியீடுகள்

(i) **"இந்து ஒளி"**




**தீபம் 23 சுடர்-01**
**விளம்பி வருடம் தை–மாசி**
**மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் மகோற்சவம் மற்றும் மகாசிவராத்திரி சிறப்பிதழ்**




**தீபம் 23 சுடர்-02**
**விளம்பி வருடம் சித்திரை–வைகாசி**




**தீபம் 23 சுடர்-03**
**விளம்பி வருடம் ஆனி – ஆடி**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மகோற்சவ சிறப்பிதழ்**




**தீபம் 23 சுடர்-04**
**விளம்பி வருடம் ஆவணி – புரட்டாதி**
**நல்லைக்கந்தன், செல்வச்சந்நிதிக் கந்தன், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் மகோற்சவ சிறப்பிதழ்**

"இந்து ஒளி" இதழில் பல்வேறு பார்வைகளைக்கொண்ட ஆக்கங்களையும், மங்கையர் பகுதி, சிறுவர் பகுதியையும் உள்ளடக்கியுள்ளதுடன், நாவலர், யோகர்சுவாமி விசேட பக்கங்களையும், இந்து ஒளி ஆன்மீக சஞ்சிகை இணையத்தளத்திலும் சகல பக்கங்களும் வர்ண அச்சில் மின்னூலாக (e-book) வெளிவந்து கொண்டிருக்கின்றது. இம் மின்னூலினை http://hinducongress.lk/tamil/hinduoli.asp என்ற இணையத்தள முகவரியினூடாகப் பார்வையிடமுடியும். இந்த இணையத்தள வெளியீட்டின் மூலம் பாரெல்லாம் இந்து ஒளி சென்றடைந்து உலகெல்லாம் வாழும் இந்து மக்களைச் சென்றடைவதும் குறிப்பிடற்பாலது.

### (ii) இந்து மக்களுக்கு ஒரு கையேடு




மாமன்றத்தின் முக்கிய வெளியீடாக இந்து மக்களுக்கோர் கையேடு திகழ்கிறது. விவேகானந்த சபையில் ஆண்டுதோறும் நடாத்தப்படும் விவேகானந்த பரீட்சைக்கு இக்கைநூல் மிகவும் உறுதுணையாகவுள்ளது. அத்துடன் அந்தியேட்டி போன்ற நினைவு நிகழ்வுகளில் அமரத்துவமடைந்தோரின் ஞாபகார்த்தமாக வழங்கவும் இந்நூல் பெருமளவில் கொள்வனவு செய்யப்படுகிறது. இது இந்து மக்கள் யாவராலும் வரவேற்கப்படும் ஒரு கை நூலாகும்.




இதனை ஆங்கிலத்திலும் வெளியிட நாம் கடந்த சில வருடங்களாக எடுத்த முயற்சி 05.04.2015இல் நிறைவேறியது.

இதனை ஆங்கிலத்தில் "A Compendium for Hindus" என்ற பெயருடன் வெளியிட, எவ்வித பிரதியுபகாரமும் பாராது அயராது உழைத்த ஆசிரியை அமரர், திருமதி. திலகா விஜயரத்தினம் அவர்கட்கு இந்து மாமன்றம் என்றும் தலைவணங்குகின்றது.

### (iii) 2019-2020ம் ஆண்டுக்கான கையடக்கப் பஞ்சாங்கம்

கடந்த 2016ம் ஆண்டுமுதல், மாமன்றத்தின் மறைந்த தலைவர் அமரர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் எண்ணக்கருவில் திருக்கணித-வாக்கிய பஞ்சாங்கங்களின் சுருக்கத்தொகுப்பினை கையடக்கப் பஞ்சாங்க வடிவில் வெளியிடும் பணி ஆரம்பிக்கப்பட்டது. அந்த வரிசையில் 2016-17, 2017-18, 2018-19 ஆகிய மூன்று கையடக்கப் பஞ்சாங்கங்கள் அமரர் திரு.கருணைஆனந்தன் அவர்களது பூரண அனுசரணையுடன் வெளிவந்திருந்தன.

அதேபோன்று, அந்தக் கையடக்கப்பஞ்சாங்கமானது மிகவும் சிறிதாக உள்ளது என்ற பின்னூட்டம் கருத்திற்கொள்ளப்பட்டு சற்றுப் பெரிதாக – ஆனால் கையடக்கமாக 2019-20ம் ஆண்டுக்குரிய பஞ்சாங்கம் வெளியிடப்பட்டது.

## 11 சிவதொண்டர் அணிகள், அறநெறிப் பாடசாலைகள் மற்றும் கல்விக்கான புலமைப்பரிசில் திட்டம்

### (i) சிவதொண்டர் அணி

இந்து மாமன்றத்தின் குறிக்கோள்களில், பாடசாலைகள் மற்றும் இந்து அமைப்புக்கள் தோறும் சிவதொண்டர் அணிகளை அமைத்துச் செயற்பட வைப்பது என்பதும் ஒன்றாகும். இதன் மூலம் எதிர்கால இளம் சமூகத்தை நல்வழியில் வாழ உதவமுடியும் என்பதே மாமன்றத்தின் நோக்கமாகும்.

இதற்காக, சிவதொண்டர் அணி பயிற்சிக் கையேடு, சிவதொண்டர் அணிக்கான துண்டுப்பிரசுரம், விண்ணப்பப் படிவங்கள் என்பன வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பிரதேச பாடசாலைகள் இந்து அமைப்புகள் என்பவற்றிற்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் மாமன்ற உபதலைவரும், இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குனருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள சிவதொண்டர் அணியின் பங்களிப்பு மிகவும் போற்றுதற்குரியது. ஆண்டுதோறும் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினர், உபவேந்தர், பேராசிரியர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் பட்டதாரிகளைச் சம்பிரதாயபூர்வமாக அழைத்துவரும் அணிவகுப்பின் முன்னணியில், பயிற்றுவிக்கப்பட்ட சிவதொண்டர் அணியினர், குடை-கொடி-ஆலவட்டம் மற்றும் மங்கள இசைக்கருவிகள் இசைத்தபடி அவர்களை அழைத்து வருதல், நல்லூர் உற்சவ காலத்தில் பல்வேறு சமயத் தொண்டுகளில் ஈடுபடுதல், உற்சவ காலத்தில் துர்க்காதேவி மணிமண்டபத்தில் வழங்கப்படும் அன்னதான நிகழ்வில் முழு ஒத்துழைப்பு வழங்குதல், போன்ற பல சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்து மாமன்றத்தின் நிகழ்வுகளில் முன்னிலை வகித்து தமது அளப்பரிய சேவைகளை ஆற்றிவருகின்றனர்.

(ii) **சிவதொண்டர் அணி மாணவ மாணவியருக்கான புலமைப்பரிசில் திட்டம்**

கல்விக்கான பொருளாதார வசதியின்றி கல்வியைத் தொடரமுடியாது தவிக்கும் சிவதொண்டர் அணிகளிலிணைந்துள்ள மாணவர்களின் கல்வி நிலையினை மேம்படுத்தும் முகமாக பாடசாலைகளிலும் அறநெறிப் பாடசாலைகளிலும் அமைந்துள்ள சிவதொண்டர் அணியிலுள்ள மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு ஒவ்வொரு அணியிலும் 10 மாணவர்களுக்குப் புலமைப்பரிசிலாக ஒரு தவணைக்கு 2000 ரூபா வீதம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இப் புலமைப்பரிசிலானது மாமன்றத்தை வழிநடாத்தி அமரர்களாகிவிட்ட செம்மல்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகிறது.

அந்தவகையில் 2019ம் ஆண்டு முதலாம் மற்றும் இரண்டாம் தவணைகளுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு வழங்கப்பட்டுள்ளன.

## சிவதொண்டர் அணி கல்விக்கான புலமைப்பரிசில் 2019

| இல | பாடசாலை/நிறுவன பெயர் | மாண. தொகை | 2019-1 | 2019-02 |
|---|---|---|---|---|
| 1 | யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை | 10 | 20,000.00 | 20,000.00 |
| 2 | செல்வச்சந்நிதி முருகன் அறநெறிப் பாடசாலை | 10 | 20,000.00 | 20,000.00 |
| 3 | யா/இளையதம்பி இந்து வித்தியாசாலை | 10 | 20,000.00 | 20,000.00 |
| 4 | கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி | 10 | 20,000.00 | 20,000.00 |
| 5 | மன்/இலுப்பைக்கடவை அ.த.க பாடசாலை | 11 | 22,000.00 | 22,000.00 |
| 6 | இந்து இளம்பிறை இறைபணி மன்றம் | 10 | 20,000.00 | 20,000.00 |
| 7 | காமதேனு இந்து சமய வளர்ச்சி மன்றம் | 10 | 20,000.00 | 20,000.00 |
| 8 | சமன்பிட்டி இந்து மகளிர் மன்றம் | 10 | 20,000.00 | 20,000.00 |
| 9 | சிவமுத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை | 9 | 18,000.00 | 18,000.00 |
| 10 | ஸ்ரீ சித்திவிநாயகர் அறநெறி பாடசாலை | 7 | 14,000.00 | 14,000.00 |
| 11 | ஹொ/திக்ஹேன தமிழ் மகா வித்தியாலயம் | 10 | 20,000.00 | 20,000.00 |
| 12 | கொ/இராமகிருஷ்ண வித்தியாலயம் | 10 | 20,000.00 | 20,000.00 |
| 13 | மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம் | 10 | 20,000.00 | 20,000.00 |
| 14 | மு/கற்சிலைமடு அ.த.க பாடசாலை | 10 | 20,000.00 | 20,000.00 |
| 15 | யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் | 20 | 40,000.00 | 40,000.00 |
| 16 | யா/ஊரெழு கணேச வித்தியாலயம் | 10 | 20,000.00 | 20,000.00 |
| 17 | யா/சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை | 10 | 20,000.00 | 20,000.00 |
| 18 | மட்/அம்மன் அறநெறிப் பாடசாலை | 10 | 20,000.00 | 20,000.00 |

(iii) **அறநெறிப் பாடசாலைகள்**

சிவதொண்டர் அணிகள் செயற்படும் அதேநேரம் அறநெறிப் பாடசாலைகளையும் அமைத்தல் தொடர்பாக மாமன்றம் முக்கிய கவனமெடுத்து வருகின்றது.

எமது இளம் சமூகத்தை ஆன்மீக வழியில் நடாத்திச் சென்று நற்பிரசைகளாக்கும் நடவடிக்கைக்கு அறநெறிப் பாடசாலைகளே ஆரம்ப படிநிலையாக விளங்குகின்றது.

எனவே தற்போது வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பிரதேசங்களில் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சியினைக் கூட்டுவதற்கும், மேலும் புதிய அறநெறிப் பாடசாலைகளை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்காக ஆண்டு தோறும் இலவச அப்பியாசக் கொப்பிகளை விநியோகித்து வருகின்றோம். இதற்கென மாமன்றம் கணிசமான நிதியை ஒதுக்கியுள்ளது..

# 12 நினைவுப் பேருரைகள்

## (i) 'மனிதநேயமாமனிதர்' அமரர் விசுவநாதர் கயிலாசபிள்ளை இரண்டாவது ஆண்டு நினைவுப்பேருரை நிகழ்வும் நாடளாவிய ரீதியில் தொடர் சொற்பொழிவு நிகழ்வுகளும்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் விசுவநாதர் கயிலாசபிள்ளை அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவுப்பேருரை நிகழ்வு கடந்த 23-02-2019 அன்று, கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. மாமன்றத் தலைவர் திரு. மா.தவயோகராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக அருள்நிறை அக்ஷராத்மானந்த சுவாமிகள் (கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர்), சிறப்பு அதிதியாக கலாநிதி ஆறு.திருமுருகன் (உபதலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்) ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் தமிழ்நாட்டைச் சோர்ந்த பிரபல தமிழ்-ஆன்மீக சொற்பொழிவாளர், முனைவர் வே.சங்கரநாராயணன் அவர்கள் "பெரியபுராணம் கூறும் வாழ்வியல்" எனும் பொருளில் நினைவுப்பேருரையினை ஆற்றினார்.



## (ii) அமரர் கந்தையா நீலகண்டன் முதலாவது ஆண்டு நினைவும் நினைவுப் பேருரையும்

அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவுப்பேருரரை நிகழ்வு, 16-03-2019 அன்று காலை 10மணி முதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. மாமன்றத் தலைவர் திரு. மா. தவயோகராஜா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர், பேராசிரியர் திரு.எஸ்.பத்மநாதன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், ஹட்டன் நாவலப்பிட்டியைச் சேர்ந்த செல்வி தியாகராசா மதிபாரதி அவர்களின் சிற்றுரையும் நடைபெற்றது.

தமிழ்நாட்டின் ஆன்மீகப் பேச்சாளர், 'சிந்தனைச்செல்வர்' ஆர்.வி.பி.எஸ்.மணியன் அவர்கள் "இன்றைய நிலையில் எமது சமயக் கடமைகள்" எனும் பொருளில் நினைவுப்பேருரையினையும் ஆற்றினார்.



## (iii) வைத்தியகலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரை

மாமன்றம் நடத்திய, கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரை நிகழ்வு, விகாரிவருடம் ஐப்பசித்திங்கள் 08ம் நாள் (25-10-2019) வெள்ளிக்கிழமை அன்று மாலை 05.00 மணிமுதல் ம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு.மா.தவயோகராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வரவேற்புரையினை மாமன்றப் பொரளாளரும் விடுதிகள் குழுத் தலைவியுமாகிய திருமதி அ.கயிலாசபிள்ளை அவர்களும், தலைமையுரையினை மாமன்றத் தலைவர் திரு.மா.தவயோகராஜா அவர்களும் நிகழ்த்தினர்.

தமிழ்நாட்டைச் சோர்ந்த பிரபல தமிழ்-ஆன்மீக சொற்பொழிவாளர், முனைவர் வே.சங்கரநாராயணன் அவர்கள் "அடியார்களின் வரலாறு அடுத்த தலைமுறைக்காக..." எனும் பொருளில் நினைவுப்பேருரையினை ஆற்றினார்.



## (iv) அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை

மாமன்றத்தின் முன்னாள்தலைவர் அமரர் திரு.வே.பாலசுப்பிரமணியம் நினைவுப்பேருரை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் திரு. வே.பாலசுப்பிரமணியம் அவர்கள் அமரத்துவமெய்திய இருபதெட்டாவது வருட நிறைவின் நினைவாக நடாத்தப்பட்ட நினைவுப் பேருரை, விகாரிவருடம் ஆடித் திங்கள் 18ம் நாள் (03-08-2019) சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.



மாமன்றத் தலைவர் திரு.மாணிக்கம் தவயோகராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணிதப் பேராசிரியரும், விஞ்ஞான தொழிநுட்ப பீடத்தின் முன்னாள் பீடாதிபதியுமாகிய பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததுடன் "வாழ்வின் ஆதாரங்கள்" என்னும் தொனிப்பொருளில் நினைவுப் பேருரையினையும் நிகழ்த்தினார்.

# 13 சமய விவகாரச் செயற்பாடுகளும் ஆலயங்களுக்கான நன்கொடைகளும்

"இந்து சமய தாபனங்கள், ஆலயங்கள், சமூக முக்கியத்துவம் வாய்ந்த புராதன நிலையங்களை அமைத்தலும் பேணுதலும்" என்பது மாமன்றத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகும். இதனடிப்படையில் பின்வரும் நடவடிக்கைகளை மாமன்றம் எடுத்துள்ளது:-

## (i) கதிர்காமப் பாதயாத்திரிகர்களுக்கான அன்னதானம் மற்றும் குடிநீர் வசதி

கடந்த காலங்களைப்போலவே, பாதயாத்திரையாகக் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்களுக்கு, ஆலையடி வேம்பு இந்து மன்றத்தால் வழங்கப்படும் அன்னதான நிகழ்விற்கு, அதன் மொத்தச் செலவின் 50% ஆகிய 100,000 ரூபாவினை மாமன்றம் வழங்கியது. அன்னதானத்திற்கான வரவு செலவுக் கணக்கினையும் புகைப்படங்களையும் ஆலையடி வேம்பு இந்து மன்றம் அனுப்பிவைத்துள்ளது.

அதேவேளை கல்முனை, சிவநெறி அறப்பணி மன்றத்தினரால் முன்வைக்கப்பட்ட கதிர்காம பாதயாத்திரிகர்களுக்கு சுத்தமான குடிநீர்ப் போத்தல் வழங்கும் கோரிக்கைக்கு அமைய ரூபா 45000 வழங்கப்பட்டது.

## (ii) சமயகுரவர் நால்வர் குருபூசை

சரஸ்வதி மண்டபத்தில் ஈழத்து திருநெறித் தமிழ் மன்றத்தால் நடாத்தப்படும் சமய குரவர் நால்வரது குரு பூசைகளுக்கான செலவில் 50% ஆகிய 34650/- ரூபா மாமன்றத்தால் வழங்கப்பட்டது.

## (iii) தெய்வ விக்கிரகங்கள் வழங்கல் மற்றும் ஆலயங்களுக்கான நிதிஉதவிகள்

1. 07-12-2019 - இங்கிரிய ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய கும்பாபிடேகத்திற்கு ரூபா 100,000 வழங்கப்பட்டது.
2. 28-12-2012 – திரியாய், செந்தூர் முரகன் ஆலயத்தின் புனர்நிர்மாணத்திற்கு ரூபா 500,000 வழங்கப்பட்டது.
3. தெமட்டகொட, ஸ்ரீ செந்தில்குமரன் திருக்கோவில் தேர் கொள்வனவிற்கு ரூபா 250,000 வழங்கப்பட்டது.
4. 08-02-2019 – நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் 10வது ஆண்டு நிறைவு நிகழ்விற்கென ரூபா 100,000 வழங்கப்பட்டது.
5. 25-02-2019 – பொலனறுவை சிவாலயத்தில் சிவராத்திரி நிகழ்வுகளை நடத்துவதற்கான மொத்தச் செலவு ரூபா 250,000 நன்கொடை திரு.பாலன் சுதாகரன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.
6. 25-02-2019 – பண்டாரவளை, இந்து ஒளிவிளக்குக் கலாமன்றத்தின் கலாசார மண்டப கட்டுமானத்திற்கு ரூபா 500,000 வழங்கப்பட்டது.
7. 03-06-2019 – களுத்துறை தெற்கு, ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய புனரமைப்பிற்கு ரூபா 100,000 வழங்கப்பட்டது.
8. 28-06-2019 - வடமராட்சி, பரமேஸ்வரன் கதிரேசன் ஆலய புனரமைப்பிற்கு ரூபா 200,000 வழங்கப்பட்டது.

9. 28-06-2019 – செய்சாகல, மகா மாரியம்மன் கோயில் கும்பாபிடேகத்திற்கான நிதியுதவியாக ரூபா 100,000 வழங்கப்பட்டது.

**தெய்வ விக்கிரகங்கள்**

10. 06-01-2019 – கொஸ்லாந்த, ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலிற்கு ரூபா 125,000 பெறுமதியான நவக்கிரக கருங்கல் விக்கிரகங்கள முழுவதும் வழங்கப்பட்டது.

11. 14-06-2019 – கற்பிட்டி, அய்யனார் ஆலயத்திற்கு ரூபா 60,000 பெறுமதியான விக்கிரகம் வழங்கப்பட்டது.

# 14 கட்டமைப்புக்களில் இந்து மாமன்றத்தின் பங்களிப்பும் மூலதனச் சொத்துக் கொள்வனவும்

(i) **திருமுறிகண்டியில் மாமன்றத்தின் பிராந்திய நிலையம்**

திருமுறிகண்டியில் அரசாங்கத்தால் எமக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் அறுபடைவீட்டுடன் கூடிய மடாலயம் மற்றும் அதனுடனிணைந்ததாகப் பெண்தலைமைத்துவத்தினைக் கொண்ட, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டமாகச் சிற்றுண்டிச் சாலை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்காக2017ம் ஆண்டில் ஜூன் மாதம் வரை கட்டடச் செலவாக ரூ 15,000,000/- செலுத்தப்பட்டது. மிகுதி வேலைகள் 2018ம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டு 25-10-2018 வரை ரூபா 3,700,000/- செலுத்தப்பட்டுள்ளது. 2019ம் ஆண்டில் இதுவரை 7,000,000 ரூபா செலுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் மொத்த திட்டத்திற்கென இதுவரை 25.7 மில்லியன் ரூபா கொடுப்பனவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் 2.5 மில்லியன் ரூபா மிகுதியாக வழங்கப்படவேண்டியுள்ளது.

(ii) **கொட்டகலையில் ஆதனம்**

நுவரெலியா பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட டிம்புல கோரளைப்பற்றிலுள்ள கொட்டகல எனும் இடத்தில் (அ) 37.91 பேர்ச் மற்றும் (ஆ) 36.67 பேர்ச் அளவுள்ள இரண்டு காணித்துண்டுகள், வர்த்தகப்பிரமுகரான திரு.எஸ்.முத்துசாமி என்பவரால் மாமன்றத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

(iii) **ஒட்டுசுட்டானில் ஆதனம்**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரினால் “காதலியார் சமணங்குளம்” என்னுமிடத்திலுள்ள 01 ஏக்கர் முடிக்குரிய காணி மாமன்றத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

(iv) **தொண்டைமானாற்றில் ஆதனம்**

வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தொண்டைமானாற்றில் 12 பரப்பு 4.312 குழி பரப்பளவான “செம்பன்குன்றுவிற்குத் தெற்கு” என்னும் நிலம் இந்து மாமன்றத்திற்கு நன்கொடையாக திருமதி சந்தானம் நல்லலிங்கம் வழங்கப்பட்டது. இதற்கான உறுதி தயாரிக்கும் வேலைகள் நீலகண்டன் சக நீலகண்டன் சட்ட நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

# 15 நினைவு முத்திரைகள் வெளியிடல்

இலங்கையிலுள்ள இந்து மன்ற அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியமாகத் திகழும் அகில இலங்கை இந்து மாமன்றம், இலங்கை வாழ் இந்து மக்களின் குரலாகத் தொடர்ந்து பணியாற்றிவரும் உச்சநிறுவனமாகும். 1955ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்து மாமன்றம் இவ்வருடம் தனது 60வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியுள்ளது.

60 ஆண்டுகாலமாக ஆற்றிவரும் சமூக சேவைகள், கல்விச் சேவைகள், சமயப்பணிகள் மற்றும் மனிதாபிமான சேவைகளின் அடிப்படையில், தொடர்ந்து பணியாற்றி 2015 ஆம் ஆண்டில் வைரவிழாக்கண்ட இந்து மாமன்றத்திற்கு நினைவுமுத்திரை வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கத்திற்குச் சமர்பித்திருக்கிறோம்.

இதேபோல், இந்துப் பாடசாலைகளைத் தோற்றுவித்து சமய ஒழுக்கநெறிகளோடு இந்து மாணவர்கள் உருவாக வழி செய்த இந்துபோட் திரு. எஸ். ராஜரட்ணம், சிவநெறி வாழ்வு வாழ்ந்து சமய விழிப்புணர்வுக்கு வழிகாட்டிய பெரியார் சட்டத்தரணி திரு.இ.நமசிவாயம் ஆகியோரது சேவைகளையும், சமய, சமூகப்பணிகளையும் கருத்திற்கொண்டு இம்மூவருக்கும் நினைவு முத்திரை வெளியிட வேண்டுகோள் விடுத்திருக்கிறோம்.

இது தொடர்பாகத் தபால் திணைக்களத்துடன் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

# 16 மாமன்றத்தின் பிற நடவடிக்கைகளும் ஏனைய நிகழ்வுகளும்

## 1. முனைவர் திரு.வே.சங்கரநாராயணன் அவர்களது தொடர் சொற்பொழிவு

23-02-2019 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற, மாமன்றத்தின் மறைந்த தலைவர் அமரர் விசுவநாதர் கயிலாசபிள்ளை அவர்களின் நினைவுப்பேருரையினை முன்னிட்டு வருகை தந்த, தமிழ்நாட்டைச் சேர்ந்த முனைவர் திரு.வே.சங்கரநாராயணன் அவர்களது தொடர் சொற்பொழிவுகள் நாடெங்கும் மாமன்றத்தினால் ஏற்பாட செய்யப்பட்டது.

24.02.2019 அன்று நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் 10வது ஆண்டு விழா, 25.20.2019 ஆலையடிவேம்பு இந்து மன்றம், 26.02.2019 கிழக்கு மாகாண இந்து ஆலய ஒன்றியம், மாலையில் பொலனறுவை, 27.02.2019 வவுனியா இந்து மன்றம் மற்றும் சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம், 28.02.2019 முல்லைத்தீவு, ஒட்டிச்சுட்டான், கற்சிலைமடு பண்டாரவன்னியன் பாடசாலை, 01.03.2019 கிளிநொச்சி இந்துக் கல்லூரி, திருமுறிகண்டி பாடசாலை, 02.03.2019 கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் அறநெறிப் பாடசாலை, 03.03.2019 இந்து கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

## 2. 'சிந்தனைச்செல்வர்' RBVS மணியன் அவர்களின் சொற்பொழிவுகள்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர், அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவுப்பேருரை நிகழ்வை முன்னிட்டு வருகைதந்திருந்த , தமிழ்நாட்டின் பிரபல்யமான பேச்சாளரான “சிந்தனைச்செல்வர்” RBVS மணியன் அவர்களது வேறு உரை நிகழ்வுகளும் நடைபெற்றன.

17-03-2019 காலை, சக்தி இல்ல மாணவ மாணவியர்களுடன் இணைந்து குழுநிலைக் கலந்துரையாடல்கள் மற்றும் கேள்விபதில்கள் என்ற வகையில் அம் மாணவர்களுடன் உரையாடல்கள் இடம்பெற்றன. இந் நிகழ்வானது சொற்பொழிவு என்ற முறையிலிருந்து முற்றிருலும் மாறுபட்டதாகவும், மாணவர்களை அதிக ஆர்வத்துடன் உள்வாங்கிச் செயற்பட வைத்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

18-03-2019 அன்று காலை கொழும்பு பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கும், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி கனிஷ்ட நிலை மாணவர்களுக்கும் என, பம்பலப்பிடடி சரஸ்வதி மண்டபத்தில் ஆன்மீகக் கருத்தரங்கு நடைபெற்றது. முன்னாள் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர் கலாநிதி த. முத்துக்குமாரசாமி அவர்களின் ஏற்பாட்டில் இரு கல்லூரிகளினதும் அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்துகொள்ள இடம்பெற்ற இந்நிகழ்வு மாணவர்களைப் பெரிதும் ஈர்த்ததாக அமைந்திருந்ததைக் காணக்கூடியதாக அமைந்திருந்தது.

## 3. திருக்கேதீஸ்வர ஆலய வரவேற்பு வளைவு தொடர்பான கூட்டம்

திருக்கேதீச்சரத்தில் மீளவும் வளைவை நிர்மாணிப்பது தொடர்பாக இந்துக்களுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த 20.07.2019 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் நல்லூரில் உள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில், இந்து மாமன்றத்தின் யாழ்.பிராந்தியப் பணிமனையின் கௌரவ இயக்குனரும் உபதலைவருமாகிய கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து சமய ஆர்வலர்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலநூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், யாழ். சின்மயா மிசன் சுவாமி சிதாகாசானந்தர், இந்துக் குருமார் தலைவர் கலாநிதி கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், மன்னார் இந்துக் குருமார் தலைவர் ம. தர்மகுமாரக் குருக்கள், வீணாகான பீடத் தலைவர் ச.வாசுதேவக் குருக்கள் திருக்கேதீஸ்வரம் ஆலயப் பிரதம குரு கருணானந்தக் குருக்கள், திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாக உறுப்பினர் பிருந்தாவனநாதன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

கலந்துரையாடலின் நிறைவில் பின்வரும் மூன்று முக்கிய தீர்மானங்கள் எய்தப்பட்டன.

1. திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குரிய வளைவை அநாகரிகமான முறையில் பிடுங்கி அகற்றியமை தவறு என்ற கண்டனத்தை கலந்து கொண்டிருந்த யாவரும் ஒன்று கூடி வெளிப்படுத்தினர்.

2. வளைவு பழைய இடத்தில் மீள நிர்மாணிக்கப்பட வேண்டும். இதற்குத் தடையாக ஆயர் உள்ளிட்ட எவரும் இருக்கக் கூடாது எனக் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

3. திருக்கேதீஸ்வர ஆலயம் இந்திய அரச உதவியுடன் பலகோடி ரூபா பெறுமதியில் மீள நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. கோவிலைப் பாதுகாக்கும் தார்மீகப் பொறுப்பு இந்திய அரசுக்கும் உரியது என்பதை இந்தியத் தூதர் ஊடாக இந்திய அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## 4. இரத்மலானை மாணவர்விடுதி ஆண்டு விழா

மாமன்றம் நடத்திய, இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர் விடுதி ஆண்டு விழா, மற்றும் சக்தி இல்ல மாணவர்களின் பிறந்ததின நிகழ்வுகள் விகாரி வருடம் ஐப்பசித்திங்கள் 08ம் நாள் (25-10-2019) வெள்ளிக்கிழமை அன்று மாலை 05.00 மணிமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

அமரர் க.வேலாயுதபிள்ளை அவர்களின் எண்ணத்தில் உதித்த மாணவர் விடுதியாகிய சக்தி இல்லத்தின் ஆண்டுவிழா, மாமன்றத் தலைவர் திரு.மா.தவயோகராஜா தலைமையில் நடைபெற்றது.

மேலும், இல்ல மாணவ மாணவியரிற்கான பிறந்தநாள் வைபவமும் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டதுடன் மாணவர்களின் நடன நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மாமன்ற விடுதிகள் குழுச் செயலாளர் திருமதி சந்திரகாந்தா முருகானந்தம் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

# 17 இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர் விடுதி

அமரர் கலாநிதி வேலாயுதபிள்ளை அவர்களின் கருத்துவித்தாக, 1998 இல் ஆரம்பிக்கப்பட்ட விடுதி, மாமன்றத்தின் ஓர் முக்கிய தொண்டாக இன்றும் தொடர்கின்றது. நாளும் பொழுதும் கண்ணும் கருத்துமாக இவ் விடுதிப் பிள்ளைகளின் தாயாகவேயிருந்து பேணிப் பராமரித்து வளர்த்துவரும் பெருமை, விடுதிகள் குழுத் தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களையும், விடுதிக்குழுச் செயலாளரான திருமதி ச.முருகானந்தம் அவர்களையும் சாரும். அன்றைய, மாமன்றத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவராக இருந்து, அமரராகிவிட்ட திரு.வி.கயிலாசபிள்ளை அவர்கள் தலைமைதாங்கி, இலங்கையில் மட்டுமல்லாது, பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா நாடுகளிலும் இயக்கிய, மனிதநேய நிதியம் வழங்கிய நிதி உதவியையும், இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (அவுஸ்திரேலியா - சிட்னி) மற்றும் கொடையாளிகளாகிய நல்ல உள்ளங்கள் வழங்கிய பலதரப்பட்ட உதவிகளையும் நன்றியுடன் குறிப்பிடவேண்டும்.

வன்னிப் போரினால் பாதிக்கப்பட்டு, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, புனர்வாழ்வு முகாம்களில் இருந்த 273 பிள்ளைகளை விடுதிக்குக் கொண்டுவந்து, அவர்களுக்குக் கல்வி கற்க ஒழுங்கு செய்து, சுதந்திரப் பறவைகளாகச் சமூகத்துடன் இணைய வழிவகுத்தமை, இவ்விடுதி செய்த பணியின் முக்கியமான வரலாறு.

இவ் விடுதியில் வாழ்ந்து, கல்விகற்ற இளைஞர்கள் பலர், இன்று நல்ல நிலைக்கு உயர்ந்து இருக்கிறார்கள்.

இவ்விடுதியினை நடத்த ஒத்துழைப்பு வழங்கும் கல்லூரி அதிபர் மற்றும் விடுதிகள்குழுச் செயலாளராக இயங்கும் திருமதி. ச.முருகானந்தம் மற்றும் ஏனைய ஆசிரியர், ஆசிரியைகளுக்கு நன்றி கூறுவதுடன், கண்ணும் கருத்துமாக விடுதிகள் பராமரிப்பில் அயராது உழைக்கும் விடுதிகள்குழுத் தலைவியும், மாமன்ற கௌரவ பொருளாளருமாகிய திருமதி. அ. கயிலாசபிள்ளை அவர்களையும், இவ்விடுதிக்குத் தாராளமாக உதவும் பல கொடை வள்ளல்களையும், குறிப்பாக ஞாயிறுதோறும் மதிய உணவு தரும் தெகிவளை ஸ்ரீ விஷ்ணு கோவில் அறங்காவலர்களையும், நிதி உதவி செய்துவரும் மனிதநேயநிதியத்தினையும் மற்றும் பெருமளவில் உதவும் அனைவரையும் மாமன்றத்தின் சார்பில் மனமுவந்து பாராட்டி நன்றி கூறிவைப்பது எமது கடமையாகும்.

ஒவ்வொரு போயா தினத்தன்றும் மதிய போசனமும், மாதாந்தம் இரு நாட்கள் இரவு போசனமும் வழங்கும் சாயிசமித்தி, ஒவ்வொரு அமாவாசை தினமும் மதியபோசனம் வழங்கும் முத்துகிருஷ்ண சுவாமி, வருடாந்தம் நிதியுதவி தரும் இந்து வித்தியாவிருத்திச் சங்கம், பல வழிகளில் நிதியுதவி வழங்கிவரும் மனிதநேயர் திரு.வி.கயிலாசபிள்ளை குடும்பத்தினர் ஆகியோருக்கு எமது நன்றிகள். மாணவர் விடுதியில் இப்போது ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளுமாக மொத்தம் 100 பேர் வரையில் இருக்கிறார்கள். முதியோர்கள் விடுதியில் முதியவர்கள் பராமரிக்கப்படுகிறார்கள்.

விடுதியில் பராமரிக்கப்படும் பிள்ளைகளின் பிறந்ததின நிகழ்வை ஒவ்வொரு மாதமும் கொண்டாட ஒழுங்கு செய்திருக்கின்றோம். இது அவர்களின் உளவலிமையை மேம்படுத்தும் என்பதற்காக, விடுதிகள்குழுத் தலைவி திருமதி. அ. கயிலாசபிள்ளை அவர்களினால் முன்னின்று செயற்படுத்தப்படுகின்றது.

**மாணவர் விடுதிக்கு உதவுங்கள்**

அகில இலங்கை இந்து மாமன்றம் சக்தி இல்லத்தில் நடத்தும், இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர் விடுதியில் இருக்கும் பிள்ளைகளுக்கு உணவு வழங்க விரும்பும் அன்பர்கள் நாளாந்த அடிப்படையில் பின்வருமாறு நன்கொடைகளைத் தந்து உதவலாம்.

| | |
|---|---|
| காலை உணவு | ரூ. 20,000/- |
| மதிய உணவு | ரூ. 30,000/- |
| இரவு உணவு | ரூ. 30,000/- |

இன்றைய காலகட்டத்தில் பல வயோதிகர்களுக்கும், பிள்ளைகளுக்கும் வாழ்வாதார உதவி தேவைப்படுகின்றது. அப்படியான தேவையுடைய ஒரு வயோதிகருக்கு அல்லது பிள்ளைக்கு மாதாந்தம் ரூ. 30,000/- வீதம் நிதியுதவி செய்வது பெரும் புண்ணியம். மேலும் சிலருக்கு மருத்துவ உதவி அவசியம் தேவைப்படுகிறது. காலத்துக் காலம் விண்ணப்பதாரிகளின் தேவையை ஆராய்ந்து அவசிய தேவை இருப்பின் மாமன்றம் முடியுமானவரை உதவி செய்து வருகின்றது.

விடுதிப் பணிகளுக்கு உதவுபவர்கள் கீழே தரப்பட்டிருக்கும் விடுதிக் கணக்கிற்கும் ஏனைய பணிகளுக்கு பொதுக்கணக்கிற்கும் பணம் அனுப்பலாம்.

Bank: Peoples' Bank – Corporate Branch
Branch: Colombo 02
Account No. 004100190001884 (**பொதுக்கணக்கு**) or 004100280001884 (**விடுதிக்கணக்கு**)
Swift Code: PSBKLKLX

# 18 நடுத்தீர்ப்பு மையம்

எமது ஆலயங்களில் பொதுவாக, நிர்வாகப் பிரச்சனைகள், உற்சவ காலப் பிரச்சனைகள், நிதிப் பிரச்சினைகள், சொத்துப் பிரச்சனைகள் என ஏகப்பட்ட பிரச்சனைகள் அடிக்கடி ஏற்படுவதுண்டு. இவற்றிற்காக எமது சமூகத்தினரிடையே வீண் சண்டைகளும் மனக்கஷ்டங்களும் ஏற்படுகின்றன. சில ஆலயங்களில் இவற்றை நீதிமன்றத்திற்குக் கூடக் கொண்டு செல்கின்றனர். இது சம்பந்தபப்பட்டவர்களுக்கு வீண் சிரமத்தையும், கால தாமதத்தையும், பணவிரையத்தையும் உணடாக்குகின்றது. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு அகில இலங்கை இந்து மாமன்றம் “நடுத்தீர்ப்பு மையம்” என்ற ஓர் அமைப்பினை உருவாக்கியுள்ளது. இதற்காக விதிகளை ஆக்கியுள்ளோம். இப் பந்தியின் கீழ் அவை விரிவாகத் தரப்பட்டுள்ளன. எனவே ஆலய நிர்வாகத்தினர் தமது ஆலயம் தொடர்பான பிரச்சனைகளை எமது கவனத்திற்குக் கொண்டுவருவதனூடாக எவ்வித பணவிரையமுமின்றி அவற்றிற்கு விரைவான சுமூகமான தீர்வினைப் பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## அகில இலங்கை இந்து மாமன்ற நடுத்தீர்ப்பு நிலையம் நடுத்தீர்ப்பு விதிகள்

ஏதேனும் உடன்படிக்கை, சமர்ப்பணம் அல்லது ஆற்றுப்படுத்துகையானது, ஓர் இந்து ஆலயம் அல்லது இந்து சமய நிறுவனம் அல்லது நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பான ஏதேனும் பிணக்கினை, அகில இலங்கை இந்து மாமன்ற நடுத்தீர்ப்பு நிலையத்தின் (‘‘அ.இ.இ.ந.நி’’) விதிகளின் கீழ் நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்கின்றபோது, சம்பந்தப்பட்ட திறத்தவர்கள் பின்வரும் விதிகளுக்கு அமைவாக அல்லது குறித்த நடுத்தீர்ப்பு ஆரம்பிக்கப்பட முன்னர் அ.இ.இ.ந.நி. ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தப்பட்ட விதிகளிற்கு அமைவாக குறித்த நடுத்தீர்ப்பானது நடாத்தப்படுவதனை ஏற்றுக்கொண்டு சம்மதித்ததாகக் கொள்ளப்படும்.

### 1. நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தல்

**1.1** ஓர் ஒப்பந்தத்தின் திறத்தவர்கள் அவ் ஒப்பந்தம் தொடர்பான பிணக்குகள் ‘‘அ.இ.இ.ந.நி. நடுத்தீர்ப்பு விதிகள்’’ எனக் குறிப்பிடப்படுகின்ற அகில இலங்கை இந்து மாமன்ற நடுத்தீர்ப்பு நிலையத்தின் விதிகளின் கீழ் நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டும் என எழுத்து மூலம் சம்மதித்துள்ளபோது, அத்தகைய பிணக்குகள் திறத்தவர்கள் எழுத்து மூலம் சம்மதிக்கும் ஏதேனும் மாற்றங்களுக்கு ஏற்ப அவ்விதிகளுக்கு அமைவாக தீர்க்கப்பட வேண்டும். அத்தகைய உடன்பாட்டைப் பின்பற்ற விரும்புவோரின் வசதிக்காக, மாதிரி நடுத்தீர்ப்பு வாசகம் ஒன்று இதன் கீழ்க்காணும் அட்டவணை 1 இல் வழங்கப்பட்டுள்ளது. X – 1995ம் ஆண்டின் 11ம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்தின் பிரிவு 4ஐப் பார்க்கவும்.

**1.2** இவ் விதிகளின் கீழ் ஒரு நடுத்தீர்ப்பை ஆரம்பிக்க விரும்பும் ஏதேனும் ஒரு திறத்தவர் (‘‘கோரிக்கையாளர்’’) நிலையத்தின் பதிவாளருக்கு (‘‘பதிவாளர்’’) பின்வரும் விடயங்களையும் உள்ளடக்கி அல்லது இணைத்து நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்துகைக்கான ஒரு எழுத்துமூலக் கூற்றினை (‘‘ஆற்றுப்படுத்துகை’’) (4 பிரதிகளில்) அனுப்ப வேண்டும்.

(அ). நடுத்தீர்ப்புக்கு வரும் திறத்தவர்களின் முழுப்பெயர்கள் மற்றும் முகவரிகள்

(ஆ). பிணக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகள் பற்றி விளக்கும் ஒரு சுருக்கமான கூற்று

(இ). நடுத்தீர்ப்பை நடாத்துதல் சம்பந்தமாகத் திறத்தவர்கள் ஏற்கனவே சம்மதித்துக்கொண்ட அல்லது கோரிக்கையாளர் முன்மொழிய விரும்புகின்ற ஏதேனும் விடயங்கள் (நடுத்தீர்ப்பு நடாத்தப்படும் இடம் அல்லது மொழி அல்லது நடுத்தீர்ப்பாளர்களின் எண்ணிக்கை அல்லது அவர்களின் தகைமைகள் அல்லது அடையாளங்கள் போன்ற விடயங்கள்) பற்றிய ஒரு கூற்று

(ஈ). எவ் உடன்படிக்கையின் கீழ் திறத்தவர்கள் பிணக்கினை நடுத்தீர்ப்புக்கு சமர்ப்பிப்பதற்கு சம்மதித்துள்ளனரோ, அவ் உடன்படிக்கையின் ஒரு பிரதி.

(உ) கோரிக்கையாளரால் ஒரு நடுத்தீர்ப்பாளர் நியமிக்கப்பட வேண்டி இருப்பின் குறித்த அந்நியமனம்.

### 2. எதிராளிக்கு அறிவித்தல்

பதிவாளர் ஆற்றுப்படுத்துகை கிடைக்கப்பெற்று 05 வேலை நாட்களுக்குள் அது பற்றிய எழுத்துமூல அறிவித்தலை நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தும் எழுத்துமூலமான வேண்டுகோள் மற்றும் அதனோடு இணைந்த ஏனைய ஆவணங்களுடன் சேர்த்து வழங்க வேண்டும். குறித்த அறிவித்தலானது பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன், எதிராளி முரணாக நிரூபிக்காதவிடத்து, பதிவுத் தபாலில் அனுப்பியதிலிருந்து 04 வது வேலை நாள் எதிராளியினால் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

### 3. பதில்

விதி 2 இன் கீழான அறிவித்தல் கிடைக்கப்பெற்று முப்பது (30) நாட்களுக்குள் எதிராளி பின்வரும் விடயங்களையும் குறிப்பிட்டு தனது பதிலை பதிவாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ). ஆற்றுப்படுத்துகையில் கூறப்பட்ட கூற்றுக்களை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது மறுத்தல்.

(ஆ). அவரது எதிர்வாதம் மற்றும் எதிர்க்கோரிக்கை ஏதேனும் இருப்பின் அவற்றின் தன்மை மற்றும் சூழ்நிலைகள் பற்றிய ஒரு சுருக்கமான கூற்று

(இ). நடுத்தீர்ப்புச் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டதான ஏதேனும் ஆட்சேபனைகள்

(ஈ). எதிராளியால் நடுத்தீர்ப்பாளர் நியமிக்கப்படவேண்டி இருப்பின் அந்நியமனம்.

மேலும், இவற்றின் பிரதியானது கோரிக்கையாளருக்கு அனுப்பப்பட்டு அதற்கான ஆதாரமும் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**4. நடுத்தீர்ப்பாளரை நியமித்தல்**

04.1 கோரிக்கையாளர் தனது ஆற்றுப்படுத்துகையில் ஒரு நடுத்தீர்ப்பாளரை, உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகைமைகள் அல்லது அடையாளங்கள் என்பவற்றுக்கமைவாக நியமிக்கலாம்.

04.2 எதிராளி தனது பதிலில் ஒரு நடுத்தீர்ப்பாளரை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகைமைகள் அல்லது அடையாளங்கள் என்பவற்றுக்கமைவாக நியமிக்கலாம்.

04.3 கோரிக்கையாளர் ஒரு நடுத்தீர்ப்பாளரை நியமித்து, ஆனால், எதிராளி மேற்குறிப்பிட்ட விதி 3 இல் ஏற்பாடு செய்தவாறு ஒரு நடுத்தீர்ப்பாளரை நியமிக்கத் தவறுமிடத்து, கோரிக்கையாளரால் நியமிக்கப்பட்ட நடுத்தீர்ப்பாளரே தனியொரு நடுத்தீர்ப்பாளராக இருப்பார்.

04.4 இரு திறத்தவர்களும் ஒவ்வொரு நடுத்தீர்ப்பாளரை நியமிக்குமிடத்து, அவ்விரு நடுத்தீர்ப்பாளர்களும் இணைந்து ஒரு மூன்றாவது நடுத்தீர்ப்பாளரை நியமிப்பார்கள். அவர் நடுத்தீர்ப்பு நியாயசபையின் தலைவராகச் செயற்படுவார்.

04.5.1 மேற்கூறப்பட்ட விதி 3 இன் கீழ் எதிராளியால் இரண்டாவது நடுத்தீர்ப்பாளர் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் இரு நடுத்தீர்ப்பாளர்களும் மூன்றாவது நடுத்தீர்ப்பாளர் தொடர்பில் ஒரு உடன்பாட்டுக்கு வரத்தவறுமிடத்து, அகில இலங்கை இந்து மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது, (இதன்கீழ் சிலசமயம் "நியமிக்கும் அதிகாரசபை" என அழைக்கப்படும்) குறிப்பிட்ட முப்பது (30) நாட்கள் காலப்பகுதி முடிவடைந்து பதினைந்து (15) நாட்களுக்குள் ஒரு மேலதிக நடுத்தீர்ப்பாளரை நியமிக்க வேண்டும். அத்தகைய நியமனமானது, திறத்தவர்களைக் கட்டுப்படுத்தும்.

04.6.2.1 குறிப்பிட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது, குறிப்பிட்ட பதினைந்து (15) நாட்களுக்குள் அத்தகைய நியமனத்தைச் செய்யத் தவறுமிடத்து, ஏதேனும் ஒரு திறத்தவர் தலைவரை நியமிப்பதற்காக, 1995ம் ஆண்டின் 11ம் இலக்க நடுத்தீர்ப்பு சட்டத்துக்கு அமைவாக, நீதிமன்றத்துக்குப் பொருத்தமான முறையில் விண்ணப்பம் செய்யலாம்.

04.5.2.2 அகில இலங்கை இந்து மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் எவரேனும் உறுப்பினர் குறித்த விடயத்தில் ஏதெனும் அக்கறைகள் தொடர்பான முரண்பாட்டைக் கொண்டிருப்பாராயின், அவர் குறித்த நியமனம் தொடர்பான ஏதேனும் தீர்மானத்தில் பங்குபற்ற முடியாது.

04.6 நடுத்தீர்ப்பாளர் ஒருவர் பதவி விலகினால் அல்லது இறந்தால் அல்லது நோய் காரணமாக தகைமையற்றவரானால் அவரை நியமித்த திறத்தவர் அல்லது நியமிக்கும் அதிகாரசபை அவரது வெற்றிடத்தை நிரப்புவார்.

04.7 நடுத்தீர்ப்பாளர்கள் தொடர்பில் இவ்விதிகளில் குறிப்பாக ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் சந்தர்ப்பம் அல்லது சூழ்நிலை ஏற்படும் போது அவ் விடயமானது, பதிவாளரால் (திறத்தவர்களுக்கு அதுபற்றிய அறிவித்தலுடன்) அகில இலங்கை இந்து மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு அனுப்பப்படும். அவ்விடயம் தொடர்பில் குறித்த நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் பொருள்கோடல் அல்லது தீர்மானமே இறுதியானதும் முடிவானதும் திறத்தவர்களை பிணிப்பதும் ஆகும். இவ்விதி 4.7 இன் கீழான நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் ஏதேனும் தீர்மானத்துக்கு விதி 4.5.2.2 இன் ஏற்பாடுகள் பொருத்தமான ஏற்றமாற்றங்களுடன் பிரயோகமாகும்.

**5. பிரதிநிதித்துவம்**

ஒரு திறத்தவர், ஒரு சட்டத்தரணியால் அல்லது ஒரு சட்டத்தரணிகள் நிறுவனத்தால் பிரதிநிதித்துவப்படுத்தப்படலாம். அச் சட்டத்தரணிக்கு அல்லது சட்டத்தரணிகள் நிறுவனத்திற்கு இதன் கீழ்க்காணும் அட்டவணை 2 இல் உள்ள மாதிரியின்படி திறத்தவர்களால் வழங்கப்பட்ட அதிகாரக் கடிதம் முதல் சந்தர்ப்பத்திலேயே பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படும். அச்சட்டத்தரணிக்கு அல்லது சட்டத்தரணிகளுக்கு அந்த திறத்தவர் சார்பில் (சத்தியக் கடதாசி தவிர்ந்த) சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவதற்கும் அத்திறத்தவருக்காகத் தோற்றுவதற்கு வேறு சட்டத்தரணிகளுக்கு அறிவுறுத்துவதற்கும் அதிகாரமுள்ளது.

**6. நடபடிமுறை**

06.1 நடுத்தீர்ப்பாளர்களின் நியமனம் நிறைவுபெற்றதும், (அவ்வாறு நிறைவுபெற்று பதினைந்து (15) நாட்கள் காலப்பகுதிக்குள்) பதிவாளர் நடுத்தீர்ப்பாளர்களுடன் கலந்தாலோசித்து நடுத்தீர்ப்பு விளக்கத்திற்கான முதலாவது திகதியைத் தீர்மானித்து அதுபற்றி, திறத்தவர்களுக்கு அறிவிப்பதுடன் நடுத்தீர்ப்பாளர்களுக்கும் தெரியப்படுத்துவார்.

06.2 விளக்கத்திற்கான முதலாவது தினத்தில் நடுத்தீர்ப்பாளர்கள் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

(அ) கோரிக்கையாளர், தனது சாட்சிகளுக்கான சகல சத்தியக் கடதாசிகளையும் அவர் தங்கி நிற்கும் ஆவணங்களின் உண்மைப் பிரதிகளையும் தாக்கல் செய்வதற்கான ஒரு இறுதித் திகதியைத் தீர்மானித்தல்.

(ஆ) எதிராளி தனது சாட்சிகளுக்கான சகல சத்தியக் கடதாசியையும் அவர் தங்கி நிற்கும் ஆவணங்களின் உண்மைப் பிரதிகளையும் தாக்கல் செய்வதற்கான ஒரு திகதியை (மேற்குறிப்பிட்ட உபபிரிவு (அ) இல் தீர்மானிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆகக்குறைந்தது முப்பது (30) நாட்களின் பின்னரானதாக) தீர்மானித்தல்)

(இ). (i). எதிராளியால் அவரது பதிலில் ஏதேனும் எதிர்கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தால்

மற்றும் அல்லது,

(ii). எதிராளியால் உறுதியளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட ஏதேனும் நிகழ்வு அல்லது விடயம் முரண்படுத்தப்பட வேண்டியுள்ளது, மட்டும் கோரிக்கையாளர் தனது சாட்சிகளுக்கான மேலதிக சத்தியக்கடதாசிகளையும் அவர் தங்கி நிற்கும் ஆவணங்களின் உண்மைப் பிரதிகளையும் தாக்கல் செய்வதற்கு ஒரு மேலதிக திகதியை (மேற்குறிப்பிட்ட உபபிரிவு (ஆ) இல் தீர்மானிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆகக்குறைந்தது முப்பது (30) நாட்களின் பின்னரானதாக) தீர்மானித்தல்.

(ஈ). மேலே (அ) தொடக்கம் (இ) வரை தீர்மானிக்கப்பட்ட திகதிகள் முடிவடைந்த பின்னர் விடயத்தைக் குறிப்பிடுவதற்காக ஒரு திகதியைத் தீர்மானித்தல்.

(உ). மேலுள்ள உபபிரிவு (ஈ) இல் குறிப்பிட்ட திகதியில் திறத்தவர்களால் தாக்கல் செய்யப்பட்ட சத்தியக்கடதாசிகள் பரிசீலித்து நடுத்தீர்ப்பாளர்கள் பொருத்தமானதெனக் கருதுமிடத்து, குறுக்கு விசாரணை மற்றும் மீள விசாரணை செய்வதற்காக விளக்கத்திற்கென ஒரு திகதியைத் தீர்மானித்தல்.

06.3 விதி 6.2 இற்கமைய நடுத்தீர்ப்பாளர்களால் தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியானது, நடுத்தீர்ப்பாளர்களால் காலத்துக்குக்காலம் அதிகரிக்கப்படலாம். ஒரு அதிகரிப்பானது முப்பது (30) நாட்களுக்கு மேற்படாதவாறு இருக்க வேண்டும்.

06.4 ஏதேனும் விடயம் அல்லது வினா தொடர்பில் எழுத்துமூலச் சமர்ப்பணங்களைச் சமர்ப்பிப்பதற்கு நடுத்தீர்ப்பாளர்கள் திறத்தவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கலாம்.

06.5 நடுத்தீர்ப்பாளர்கள் சான்றுக்கட்டளைச் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படமாட்டார்கள். ஆனால், அவர்கள் தொழிநுட்ப விடயங்களில் அல்லாது சான்றுக்கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விரிவான கொள்கைகளினால் வழிநடத்தப்படலாம்.

06.6 நடுத்தீர்ப்பாளர்களால் திறத்தவர்களின் சம்மதத்துடன் வேறுவகையில் தீர்மானிக்கப்பட்டாலன்றி, நடுத்தீர்ப்பு விளக்கத்திற்கான சகல அமர்வுகளும் அ.இ.இ.ந.நி. இனால் ஒழுங்கு செய்யப்பட்ட ஓர் இடத்தில் நடைபெறும்.

06.7 நடுத்தீர்ப்பாளர்கள் தமிழ்மொழியில் நடத்தத் தீர்மானித்தாலன்றி, நடுத்தீர்ப்பு அமர்வுகள் யாவும் ஆங்கில மொழியில் நடாத்தப்படும்.

**7. நடுத்தீர்ப்பாளர்கள் குழாம்**

எவரேனும் ஆள், அ.இ.இ.ந.நி. இல் நடாத்தப்படவுள்ள ஏதேனும் நடுத்தீர்ப்பு அமர்வுகளில் நடுத்தீர்ப்பாளராக நியமிக்கப்படுவதற்கு, நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினால் சிபார்சு செய்யப்பட்டால், அவ் ஆள், அ.இ.இ.ந.நி உடன் பதிவுசெய்யப்பட வேண்டும் என்பதுடன் பதிவாளர் அவரது பெயரை நடுத்தீர்ப்பாளர்கள் குழாமில் உள்ளடக்க வேண்டும். ஒரு நடுத்தீர்ப்புக்கு எதிர்பார்க்கின்ற ஏதேனும் திறத்தவர் அல்லது அவரது சட்டத்தரணி ரகசியத் தன்மையைப் பேணுவதற்காக ஒரு எழுத்துமூல விண்ணப்பத்தை (சபையால் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில்) பதிவாளருக்குச் செய்வதன் மூலம் நடுத்தீர்ப்பாளர்களின் பெயர்களையும், அவர்களால் எதிர்பார்க்கப்படும் கட்டணத்தையும் கொண்ட நடுத்தீர்ப்பாளர்கள் குழாமின் பட்டியலைப் பரிசீலிக்க முடியும். தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் ஒரு கட்டளை வழங்கப்பட்டாலன்றி, வேறுவகையில் அகில இலங்கை இந்து மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது நடுத்தீர்ப்பாளர்கள் குழாமின் பட்டியலை வெளியிடுவதற்கு அல்லது காட்சிப்படுத்துவற்கு மறுக்கலாம். ஒரு நடுத்தீர்ப்பின் எத் திறத்தவரும் குறிப்பிட்ட நடுத்தீர்ப்பாளர்கள் குழாமிலிருந்துமட்டும்

நடுத்தீர்ப்பாளரை நியமிப்பதற்கு கட்டுப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், அகில இலங்கை இந்து மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது, நியமிக்கும் அதிகார சபையாக உள்ளபோது, குறித்த சபையானது, குறித்த குழாமிலுள்ள நடுத்தீர்ப்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கலாம். ஆனால், குழாமில் பெயர் குறிப்பிடப்படாத ஒருவரை நடுத்தீர்ப்பாளராக நியமிப்பதற்குச் சுதந்திரமுடையது.

**8. நிலையத்துக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணம்**

அகில இலங்கை இந்து மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படவும் மாற்றப்படவும் கூடிய கட்டண அட்டவணை ஒன்றிற்கு அமைவாகக் கட்டணமானது, ஒவ்வொரு திறத்தவராலும் நிலையத்துக்கு செலுத்தப்பட வேண்டும் அல்லது வைப்பிலிடப்பட வேண்டும். குறித்த கட்டண அட்டவணையானது அ.இ.இ.ந.நி. அறிவித்தலில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பதுடன் அதன் பிரதிகள் பதிவாளரிடம் வைத்திருக்கப்படும். எவ்வாறாயினும், அ.இ.இ.ந.நி இனால் மேற்கொள்ளப்பட்ட சகல செலவுகளும் திறத்தவர்களால் மீள்செலுத்தப்பட்ட வேண்டும் என்பதுடன் அ.இ.இ.ந.நி காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் முறையில், செலவுகளை ஈடுசெய்வதற்காகத் தேவைப்படுத்தப்படும் வைப்புக்கள் முன்கூட்டியே திறத்தவர்களால் வைப்புச் செய்யப்பட வேண்டும்.

**09. நடுத்தீர்ப்பாளருக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம்**

ஒரு நடுத்தீர்ப்பில் நடுத்தீர்ப்பாளருக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணமானது, ஒவ்வொரு திறத்தவராலும் சம்பந்தப்பட்ட நடுத்தீர்ப்பாளரின் நெறிப்படுத்தலுக்கமைய நிலையத்துடன் வைப்பிலிடப்பட வேண்டும்.

**10. தீர்வு**

நடுத்தீர்ப்பாளர்கள் விரைவாக தமது தீர்வை வழங்க வேண்டும் என்பதுடன், நடுத்தீர்ப்பாளருக்கு ஏதேனும் கட்டணம் செலுத்தப்படவேண்டி இருப்பின், தீர்வின் மூடப்பட்ட பிரதி ஒன்றானது பதிவாளரிடம் வைத்திருக்கப்பட்டு சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கு நடுத்தீர்ப்பாளர்களின் கட்டளைப்படி வழங்கப்படும்.

**11. விலக்களிப்பு**

அ.இ.இ.ந.நி. இன் சார்பில் ஏதேனும் தன்னிச்சையான பிறழ்நடத்தை அல்லது தனிப்பட்ட கவனயீனம் ஏதாவது இருந்தாலன்றி வேறுவகையில் ஒரு நடுத்தீர்ப்பாளரின் செயலுக்கு அல்லது செய்யாமைக்கு எத்திறத்தவர்க்கும் அ.இ.இ.ந.நி ஆனது வகைசொல்லவோ அல்லது பொறுப்பாகவோ மாட்டாது. மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை 1 இவ் ஒப்பந்தம் உடன்படிக்கை அல்லது அரசியல் யாப்பிலிருந்து எழுகின்ற அல்லது இது சம்பந்தமான அல்லது இதன் தொடர்ச்சியான, இதனது ஏதேனும் நியதி அல்லது நிபந்தனைகளின் பிணக்கு, மீறல், முடிவுறுத்தல் அல்லது வலிதாகும் தன்மை பற்றிய முரண்பாடு அல்லது கோரிக்கை என்பவை உள்ளடங்களாக 1995ம் ஆண்டின் 11ம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்தால் வரையறுக்கப்பட்டவாறான ஏதேனும் பிணக்கானது, நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தும் அத்திகதியில் உள்ளவாறான அகில இலங்கை இந்து மாமன்ற நடுத்தீர்ப்புக்கு நிலையத்தின் விதிகளுக்கு ("அ.இ.இ.ந.நி நடுத்தீர்ப்பு விதிகள்") அமைவாக நடுத்தீர்ப்பின் மூலம் தீர்க்கப்படும்.

திறத்தவர்கள், பின்வரும் விடயங்களைச் சேர்த்துக்கொள்வது பற்றி கருத்திலெடுக்கலாம்.

01. நடுத்தீர்ப்பாளர்களின் தகைமையானது..................................

02. நடுத்தீர்ப்பாளர்களின் எண்ணிக்கையானது நியமிக்கும் அதிகாரசபையால் நியமிக்கப்படும்போது ஒன்று அல்லது மூன்று.

## விதி 5 இல் குறிப்பிடப்பட்ட அட்டவணை 2[XX]

இத்தாற் சகலருமறிக,.......................................................ஐச் சேர்ந்த ..................................................... ஆகிய நான்/நாம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்ற சட்டத்தரணி ....................................................... அவர்களை எனது/எமது உண்மையானதும் சட்டபூர்வமானதுமான சட்டத்தரணியாக நியமனம் செய்து எனது/எமது சார்பில் எனது/எமது பெயரில் எனக்காகவும்/எமக்காகவும் நடுத்தீர்ப்பாளர்கள்முன் தோற்றவும் சகல விண்ணப்பங்களையும் மேற்கொள்ளவும் சகல ஆவணங்களையும் தாக்கல் செய்யவும் அதிகாரம் அளிக்கின்றேன் /அளிக்கின்றோம்.

மேலும், எனது/எமது சட்டத்தரணி/சட்டத்தரணிகள் சகல சட்டபூர்வமான வழிகளையும் முறைகளையும் பின்பற்றுவதற்கும் நான் /நாம் நேரடியாக தோன்றியிருப்பின் இவ்விடயத்தில் சட்டபூர்வமாக மேற்கொண்டிருக்கக்கூடிய தேவையான சகல விடயங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் நான் /நாம் எனது/எமது சட்டத்தரணிக்கு/சட்டத்தரணிகளுக்கு அதிகாரம் அளிக்கின்றேன்/அளிக்கின்றோம். மேலும், அனைத்து வகையான குறைபாடுகளை நிவர்த்திபண்ணவும் எனது/எமது சட்டத்தரணி/சட்டத்தரணிகள் இவ்விடயம் தொடர்பில் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளையும் அனுமதிக்கவும் சீராக்கவும் உறுதி அளிக்கின்றேன் /அளிக்கின்றோம்.

இதற்கத்தாட்சியாக நான்/நாம் ..............ம் ஆண்டு .................ம் மாதம் .........ம் திகதி.......................................என்னும் இடத்திலிருந்து கையொப்பமிடுகிறேன்/கிறோம். சகல கட்டளைகள் அறிவித்தல்களையும் வழங்குவதற்கான குறித்த சட்டத்தரணியின்/சட்டத்தரணிகளின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் வருமாறு:

.................................
கையொப்பம்

XX -இம் மாதிரியானது பொருத்தமான மாற்றங்களுடன் பாவிக்கப்படலாம்.

# 19 அங்கத்துவ சங்கங்களின் செயற்பாடுகள்

01. மாமன்றத்தின் அங்கத்துவ சங்கங்கள் பல, தமது பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றன. எனினும் அச் சங்கங்களின் சேவை இன்னும் உயர்த்தப்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் இருப்பதை எமது அங்கத்துவ சங்கங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். மாமன்றம் ஓர் ஒன்றியம் - உச்ச நிறுவனம். சகல பொறுப்புகளையும் மாமன்றம் எடுத்துச் செய்யமுடியாது. ஒவ்வொரு அங்கத்துவ சங்கங்களும் முன்வந்து, மாமன்றத்துடன் இணைந்து பணியாற்றினால் மாமன்றத்தின் சேவைகளை மேலும் மக்களுக்குப் பயனுடையதாகச் செய்யலாம் என்பதனை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றோம். அத்தோடு அங்கத்துவ சங்கங்கள் ஊடாக மாமன்றம் வழங்கும் நிதியுதவிகளுக்குரிய செலவின விடயங்கள், கணக்கறிக்கைகள் என்பவற்றை பல அங்கத்துவ சங்கங்கள் அனுப்புவதில்லை. எமது கணக்காய்வு நடவடிக்கைக்கு இது முக்கியமென்பதால் சேவைகளை விரைவில் நிறைவேற்றி உரிய கணக்கறிக்கையை எமக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

02. எமது அங்கத்துவ சங்கங்கள் சில எவ்வித பொறுப்புக்களுமின்றி செயற்படுவதை நாம் மிகுந்த மனவேதனையுடன் நோக்குகின்றோம். சில அங்கத்துவச் சங்கங்கள் மாமன்றத்துடன் எவ்வித தொடர்புகளையும் பேணுவதில்லை. அத்துடன் முகாமைப் பேரவை கூட்டங்களுக்கு எம்மால் அழைக்கப்பட்டும் அவர்கள் சமூகம் கொடுப்பதில்லை என்பதை மிகுந்த மனவேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அத்துடன் மாமன்றத்தால் அடிக்கடி வேண்டுகோள் விடுத்திருந்தும், அவை, சிவதொண்டர் அணிகளை ஸ்தாபித்தலில் எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை என்பது யாதார்த்தம். எனவே சகல அங்கத்துவ சங்கங்களும் தமது செயற்பாடுகளை மக்கள் நலன்நோக்கி ஒன்றுபட்டு முன்னெடுப்பதுடன் மாமன்றத்திற்கும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று மீண்டும் சுட்டிக்காட்டுகின்றோம்.

03. மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம், சிவதொண்டர் அணியினூடான சேவையைக் குறிப்பாக திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் மகாசிவராத்திரி மற்றும் உற்சவ காலங்களில் தொடர்ந்து செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் யாழ்ப்பாணத்தில், மாமன்ற உதவிப்பணிமனையால் நிர்வகிக்கப்படும் சிவதொண்டர் அணிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா, நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவம் போன்ற நிகழ்வுகளில் அர்ப்பணிப்புடன் பங்குபற்றுவதையும் குறிப்பிட வேண்டும். நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் மாமன்றத்தின் சிவதொண்டர் அணி விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் உருவாகிவரும் சிவதொண்டர் அணிகள் எதிர்காலத்தில் வினைத்திறனுடன் இயங்கும் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

குறுகிய காலத்தில், மாமன்றத்தால் வழிநடாத்தப்படும் சிவதொண்டர் அணிகளின் சேவைகள் அந்தந்தப் பிரதேசங்களில் மேலும் சிறப்புற இயங்கவேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும்.

## 20 கிடைக்கப்பெற்ற நன்கொடைகள்

1 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் கண்பார்வையற்ற இரு மாணவர்களுக்கு எமது முகாமைப்பேரவை உறுப்பினராகிய திரு. எம. ஆர. இராஜ்மோகன் அவர்களால் வழங்கப்படும் நன்கொடையிலிருந்து ஒவ்வொரு கல்வித் தவணைக்குமாக தலா ரூபா 9000/- கல்விச் செயற்பாட்டிற்காக வழங்கப்படுகின்றது.

2 அவுஸ்திரேலியா, சிட்னியைச் சேர்ந்த திரு திருமதி தங்கராஜா ஆகியோரால் 2016ல் நன்கொடையாக வழங்கப்பட்ட 1,000,000 ரூபாவானது 100/- X 10,000 முறிகளாக கொமர்ஷல் வங்கியில் 10 வருடங்களுக்கு வைப்பிலிடப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வட்டி வருமானம் வன்னியில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மாணவர்களின் கல்வித் தேவைகக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

## 21 இந்து மாமன்றத்தின் வேண்டுகோள்

i. **சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை**

இந்து மக்களின் தொடர் அழுத்தங்கள் காரணமாக சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சிலரை இவ்வரசு பிணையில் விடுவித்துள்ளது. மேலும் சிலர் விடுவிக்கப்படும் நிலையில் உள்ளனர். இதற்காக இந்து மாமன்றம் தொடர் நடவடிக்கை எடுத்து வருவதுடன் சட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது. இதற்காக சட்டத்தரணிகள் சிலரை அமர்த்தி நீதிமன்றம் மூலம் அவர்களை விடுவிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

ii. **மகாசிவராத்திரியின் மகிமையைப் பேணவேண்டும்**

மகாசிவராத்திரி தினத்தில் இந்துக்கள் ஆலயங்களிற்குச் சென்று வழிபாடுகளை ஆற்றுவதுடன் இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்கள் தமது சொந்த இடங்களிற்குத் திரும்பப் பிரார்த்திக்கும்படியும் மாமன்றம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

## 22 இந்து மக்களின் குரலாக

i. அகில இலங்கை இந்து மாமன்றம் இந்நாட்டின் இந்து மக்களின் குரலாகத் தொடர்ந்து ஒலித்து வருகின்றது. புத்தாண்டு, தைப்பொங்கல், தீபாவளி தினங்களில் நாங்கள் வெளியிடும் செய்திகளும், எமது மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை எடுத்துக்கூறி மாமன்றம் வெளியிடும் அறிக்கைகளும், தொடர்ந்தும் இந்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இந்நாட்டு இந்து மக்களின் குரலாக மதிக்கப்பட்டு வருகின்றன.

ii. **தலைமை அலுவலகம்**



மாமன்றத்தின் தலைமை அலுவலகத்தில் திரு. க. பாலசுந்தரம் (நிர்வாக அலுவலர்), திரு.முருகையா பிரணவன் (திட்ட அலுவலர்), திரு. அ. குலேந்திரன் (அலுவலக உதவியாளர்) ஆகியோர் தமது பணிகளை ஆற்றிவருகின்றனர். மேலும் இங்கு கோயில் கொண்டிருக்கும் சிவகாமி அம்பாள் சமேதராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கும் விநாயகப் பெருமான் முருகப் பெருமான் ஆகியோருக்கும் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நைவேத்தியப் பூசையும், விசேட தினங்களில் அபிஷேகத்துடன் சிறப்புப்பூசைகளும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

iii. **யாழ் பிராந்திய அலுவலகம்**

அகில இலங்கை இந்து மாமன்ற நடவடிக்கைகளை யாழ் மண்ணில் முன்னெடுப்பதிலும் சிவதொண்டர் பயிற்சி, நூலகவிருத்தி ஆகியவற்றிலும் யாழ் அலுவலகம் பங்காற்றி வருகிறது. இங்கு திரு.வி.ஜெயசிங்கம் (நிர்வாக அலுவலர்), செல்வி சௌ.தனலட்சுமி (கணனி இயக்குனர்) அவர்களும் இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குனர் சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் வழிகாட்டலில் சேவையாற்றுகின்றனர்.



iv. **இந்து ஆராய்ச்சி நிலையம்**

எமது யாழ். பணிமனையில் இந்து ஆராய்ச்சி நிலையம் இயங்குகின்றது. கலாநிதி ஆறுதிமுருகன் அவர்கள் எமது மாமன்றத்தின் உப தலைவர்களுள் ஒருவராக இருப்பதோடு, மாமன்றத்தின் யாழ். பணிமனையின் செயற்பாடுகளை கௌரவ இயக்குனராகவும் இருந்து வழிநடத்தியும் வருகின்றார்.

செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவராகச் செயற்படுவதோடு சிவபூமி அறக்கட்டளை நிலையத்தின் ஸ்தாபகராகவும், தலைவராகவும் தொண்டாற்றி, கொக்குவில் மனவளம் குன்றிய சிறுவர்களுக்கான பாடசாலை, தொல்புரத்தில் வயோதிபர் இல்லம் முதலியவற்றைச் சிறப்பாக நிர்வகித்து வருகின்றார்.

இவரது முயற்சிகளுக்கல்லாம் சிகரம் வைத்தாற்பேல அமைந்திருப்பது, நாவற்குழியில் அமைக்கப்பட்டு, இந்த ஆண்டு திறந்துவைக்கப்பட்டுள்ள திருருவாசக அரண்மனையாகும். அத்துடன் இணைந்துள்ள சிவதெட்சிணாமூர்த்தி கோவிலும் மிகவும் சிறப்பானதொரு பணியாக அமைகின்றது.

மாமன்ற தலைமையகக் கட்டிடத்தில், இந்து ஆராய்ச்சி நூல்நிலையத்தையும் ஸ்தாபித்து, சைவவித்தகர் பயிற்சியினைச் சிறப்பாக நடாத்தியதோடு, சிவதொண்டர் அணியினருக்கான பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார். அவர், பாரெல்லாம் சென்று, தன்னை வழிநடத்திய குருவாகிய தெய்வத்திருமகள், சிவத்தமிழ்ச் செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாகுட்டியின் வழியில், எமது சமயத்தின் பெருமையினை எடுத்துரைத்து வருகிறார். அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளிலும் சமய உரைகள் ஆற்ற அழைக்கப்பட்டிருந்தார். ஆண்டுதோறும் திருச்செந்தூர் திருத்தலத்தில் கந்தசஷ்டியையொட்டி ஆறு தினங்களும் சிறப்புரைகளை நிகழ்த்த அவர் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க, ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் ஆலோசனையின்பேரில், எமது மாமன்றம் அடுத்தடுத்து விடுத்த வேண்டுகோளினையும் ஏற்றுக் கொண்டு, மாமன்றத்தின் ஆன்மீகப் பணிக்குத் தனது முழுநேரப் பங்களிப்பை வழங்கி வருகிறார்.

## 23 உதவிகளுக்கு நன்றிகள்

எமது பணிகள் யாவும் நன்கு நடைபெறுவதற்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிக் கொண்டிருக்கின்ற ஒவ்வொருவரையும் பெயர் குறிப்பிட்டு நன்றி தெரிவித்தல் இயலாத காரியமாகும். அதற்காக அவர்கள் குறை கூறமாட்டார்கள் என்ற நம்பிக்கையுமுண்டு. இருந்தபோதிலும், சிலரை நாம் குறிப்பிடாமல் விடவும் முடியாது. மாமன்றத்திற்கு என்றும் ஆதரவு தந்து வடக்கில் சைவத்தின் பெருமைகளைப் பேணும் நல்லூர் ஆதீன முதல்வர் அவர்களுக்கும், மாமன்றம் அழைப்பு விடும் போதெல்லாம் எவ்வித ஆட்சேபனையோ தயக்கமோ இன்றி எமது நிகழ்ச்சிகளில் எங்களிலொருவராகக் கலந்து சிறப்பித்து நல்ல வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் விளங்கிய கொழும்பு இராமகிருஷ்ண மடாலய முன்னாள்தலைவர் சுவாமி சர்வரூபானந்தா அவர்களுக்கும் தற்போது பொறுப்பேற்றுள்ள வணக்கத்திற்குரிய அக்ஷராத்மானந்த சுவாமிகளுக்கும், கிழக்கில் இந்து ஆன்மீகத்தை தொடர்ந்தும் மேம்படுத்திவரும் மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மிஷன் தலைவருக்கும், அமெரிக்காவிலிருந்து வந்து எமது நிகழ்ச்சிகளில் கலந்து அவற்றை மேம்படுத்தும் ஹவாய் சைவ ஆதீனம் தவத்திரு ரிஷி தொண்டுநாதன் அவர்களுக்கும், நாம் வேண்டும்போதெல்லம் எமக்குப் பலவழிகளிலும் ஆதரவுதரும் மதிப்புக்குரிய வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் ஐயா, மற்றும் பெரியோர்கள், மாமன்றப்பணிகளைச் சிறப்பாகச் செய்துவரும் அலுவலர்களான திரு. க. பாலசுந்தரம், திரு. மு. பிரணவன், திரு.அ.குலேந்திரன் மற்றும் மாமன்ற யாழ் பிராந்திய பணிமனை அலுவலர்கள் திரு. வீ. ஜெயசிங்கம், செல்வி. சௌ. தனலட்சுமி, யாழ் மாமன்றப் பிராந்திய அலுவலகத்தின் கௌரவ இணைப்பாளராக இருக்கும், இளைப்பாறிய கல்வி அதிகாரி திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மற்றும் முழுமையான பங்களிப்பை வழங்கி வரும் மாமன்ற உபதலைவர் செஞ்சொற்செல்வர் சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்கிவரும் சேவைகளையும் மெச்சி நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இன்னும் பலர் மாமன்றப்பணிகளுக்கு உதவினர். எல்லோரையும் பெயர் குறிப்பிட்டு மெச்ச அல்லது பாராட்டி நன்றி கூறத் தவறியிருந்தால் பொறுத்தருள வேண்டும் எனக் கெட்டுக் கொள்ளுகின்றோம். திட்டமிட்டு ஒதுக்கவில்லை என்ற எமது வாக்குறுதியை ஏற்று அவர்கள் மனம் நோக வேண்டாம் என வேண்டி அவர்களையும் மனதாரப் போற்றி நன்றி கூறுகின்றோம்.

# 24 நிறைவு

கடந்த காலங்களைப் போன்று அனைவரினதும் ஆதரவும் ஒத்துழைப்பும் மேன்மேலும் தொடரவும், மாமன்றப் பணிகள் மேன்மேலும் சிறந்து விளங்கவும், மாமன்றம் இந்நாட்டு இந்து மக்களின் உச்சநிறுவனமாக தொடர்ந்து மிளிரவும், மாமன்றத்தின் பணிகள் சரியான வகையில், உண்மையாகவே தேவையுடைய மக்களைச் சென்றடையவும், இந்து மக்களின் உரிமைக் குரலாக ஒலித்து அவர்களின் நல்வாழ்வுக்கு உறுதுணையயாக நிற்கவும் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் அருளாசி என்றும் நிலைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து நிற்கின்றோம்.

"இறைபணி நிற்க"

சுபம்

முகாமை பேரவையின் சார்பில்
வேலுப்பிள்ளை கந்தசாமி
பொதுச் செயலாளர்

பத்திரிகைச் செய்தி 11-01-2019

## தமிழ் மக்கள் தமது புராதனமான சமயநெறி, பண்பாடு, கலை, கலாசார அடையாளங்களைப் பேணி தலைநிமிர்ந்து வாழவேண்டும்!

### அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தைப்பொங்கல் செய்தி

மலரும் தைப்பொங்கல் திருநாள், தமிழர் வாழ்வில் நல்லதோர் விடியலைத்தரவேண்டும் என்ற எண்ணமே மனமெங்கும் பொங்கிநிற்கின்றது. தமிழ் மக்களின் பண்பாட்டினை, பாரம்பரியத்தை, நன்றிகூறும் பண்பினை வெளிப்படுத்தும் தனிப்பெரும் அடையாளமாகத் திகழ்வதே “பொங்கல் விழா” ஆகும்.

அவ்வாறான, தமிழர் புராதன விழாவான தைப் பொங்கல் என்னும் உன்னதமான இன்றைய தினத்தில், இந்த உலகமே இயங்குவதற்குத் தேவையான, உணவு உற்பத்திக்கு உறுதுணைசெய்யும் சூரியபகவானுக்கும், இயற்கைக்கும், பசுக்கள், காளைகள் என்பவற்றுக்கும் நன்றிசெலுத்தும் ஒரு பண்பாட்டைத் தொன்றுதொட்டுக் கொண்டாடி வருகின்றோம். இந்த சூரியக் குடும்பத்தின் இயங்குசக்தியாகத் திகழ்வது சூரியனே! இச் சூரியசக்தியனாலேயே இப்புவியிலுள்ள சகல ஜீவராசிகளும் சக்திபெற்று உயிர் வாழ்கின்றன. பயிர்கள் செழிக்கின்றன.அத்துணை சக்திவாய்ந்த, உணவு உற்பத்திக்கு மூல சக்தியாக உதவும் சூரியனுக்கு நன்றி செலுத்தவேண்டியது நமது ஒவ்வொருவரினதும் கடமை. பொங்கலன்று வீட்டின் முற்றத்தில் பசுஞ்சாணத்தினால் மெழுகி, அரிசிமாக் கோலமிட்டு. புது மண்பானை வைத்து, அறுவடைசெய்யப்பட்ட புதிய அரிசியைக் கொண்டு பொங்கி, முக்கனிகளுடன் கரும்பும் பாலுந் தேனும் படைத்துச் சூரியனுக்கு நன்றிசெலுத்தி வணங்க வேண்டும். உழவுத்தொழிலுக்குப் பலவிதங்களில் துணைசெய்யும் பசுக்கள், காளைகளுக்கும் மற்றும் ஏனைய விலங்கினங்களுக்கும் நன்றிசெலுத்தி மரியாதை செய்யும் நாளே, பொங்கலுக்கு அடுத்த நாளாகிய பட்டிப் பொங்கல் எனப்படும் மாட்டுப் பொங்கல் தினமாகும்.

நாகரிகம் தோன்றிய காலந்தொட்டே, மனிதன் தன் வாழ்க்கைக்கு உதவும் இயற்கைக்கு நன்றி செலுத்தி வணங்கும் மரபினைக் கொண்டிருந்தான் என்பதற்கு சிந்துவெளி நாகரிகம்முதல் தமிழ்நாட்டின் கீழடி போன்ற பல்வேறு தொல்லியல் சான்றுகளும், இலங்கையில் காணப்படும் பலவேறு, ஆதி தமிழ்க்குடிகளின் தொல்பொருட் தடயங்களும் உணர்த்தி நிற்கின்றன.

காலவோட்டத்தில் பல்வேறு மாற்றங்களைச் சமூகங்கள் கண்டாலும், பல்வேறு ஆக்கிரமிப்பாளர்களின் கொடுங்கோல் ஆட்சி மற்றும் மதமாற்ற செயற்பாடுகளுக்கும் எதிராகப் போராடி, இன்றுவரை தமிழர் நாகரிகம் தழைத்தோங்கி நிற்கின்றது என்பதை நினைக்கும்போதே நெஞ்சில் ஒருவித கம்பீரத்தைத் தோற்றுவிக்கின்றது. ஆசிய நாடுகள் என்று இன்று சுட்டிக்காட்டப்படும் நிலப்பரப்பெங்கும் விரவிக்கிடந்த பழந்தமிழர் நெறிதவறாத நீதி, ஆட்சிமுறை, அரசியல், வீரம், சாணக்கியம், பண்பாடு, கலை, கலாசாரம், வழிபாட்டு முறைகள் என்பன யாவும், மிகப்பெரும் சக்திவாய்ந்த - உலகமே வியந்து பார்த்த நிலையில் இருந்தது. ஆனால் 16ம் 17ம் நூற்றாண்டுகளில் ஆசிய நாடுகள் மீது மேற்குலக நாடுகள் ஆக்கிரமித்து எமது வளங்களைச் சூறையிட்டு எமது தனித்தவத்தை அழித்து, எம்மைத் தமக்கு விசுவாசமான வேலையாட்களாக மாற்ற முயற்சித்து ஓரளவு வெற்றியும் கண்டனர். அந்த திரைமறைவுப் பணி இன்றும் மேற்குலக நாடுகளால் திட்டமிட்டு அரசியல், மத ரீதியாக செயற்படுத்தப்பட்டு, ஆசிய நாடுகளை இன்றும் தமது காலனித்தவ நாடுகளைப்பேன்று வைத்திருக்கும் பணிகள் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளை நாம் ஒவ்வொருவரும் தெரிந்துகொண்டு, விழிப்படைந்து, தமிழர்தம் புராதன பண்பாட்டு, கலை, கலாசார, சமயநெறிகளைப் பேணிப்பாதுகாத்து அடுத்த தலைமுறையினரையும் வழிகாட்டிச் சரியான பாதையில் நடத்திச் செல்வது, தமிழர்களாகிய ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இத் தினத்தில், தமிழர் மீண்டும் தலைநிமிர்ந்து, உரிய உரிமைகள் பெற்று வாழவேண்டும், விசாரணையின்றிச் சிறைகளில் வாடும் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும், தமது சொந்த இடங்களைவிட்டு வேறிடங்களில் வாழும் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களுக்குக் கூடியசீக்கிரம் திரும்பவேண்டும், கல்வி கற்கும் மாணவர்கள் தமது கல்வியில் நல்ல பெறுபேறுகளைப் பெற்று உயரிய பதவிகள் வகித்து தமிழர் நல்வாழ்விற்கு உறுதுணை செய்யவேண்டும் என்றும், உலக மக்கள் யாவருக்கும் வாழ்வில் நலமும் வளமும் பொங்கவேண்டும் என்றும், எல்லாம்வல்ல பரம்பொருளைப் பணிந்து — அன்புடன் பிரார்த்திப்பதுடன், உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு எமது உளம் கனிந்த தைப் பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மா.தவயோகராஜா
தலைவர்

வே.கந்தசாமி
பொதுச் செயலாளர்

**அனுபந்தம் 02**

02.03.2019

**<u>தெய்வ விக்கிரகங்களைச் சேதப்படுத்தும் விசம செயல்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் கடும் கண்டனம்</u>**

கடந்த காலங்களில் இந்து ஆலயங்கள் மற்றும் தெய்வ விக்கிரங்கள் மீது நடாத்தப்பட்டு வரும் தாக்குதல்கள் இந்த நாட்டில் வாழும் இந்து மக்களை மிகவும் வேதனை கொள்ளச் செய்துள்ளது. இது தொடர்பாக இலங்கை இந்து மன்ற அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியமாகத் திகழும் அகில இலங்கை இந்து மாமன்றம் தனது கண்டனங்களையும் முறையீடுகளையும் காலத்திற்குக் காலம் மேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதமர் உட்பட உரிய தலைவர்களுக்கும் மேலதிகாரிகளுக்கும் முன்வைத்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக 28.02.2019 அன்று திருக்கோணேஸ்வரம் ஆலய அன்னதான மண்டபத்தின் முன்னால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் விஷமிகளால் உடைத்து நொருக்கப்பட்டு பிரிதொரு இடத்தில் போடப்பட்ட செயலானது மிகவும் கண்டனத்துக்குரியது . இவ்வாறான மனிதத் தன்மையற்ற செயல், திருமலை மாவட்ட மக்களை மட்டுமல்ல இலங்கை வாழ் இந்துமக்கள் அனைவரையும் வேதனைக்குள்ளாக்கியது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.தமது மதத்தைப் புனிதமாகப் பின்பற்றி, பிறசமயங்களை அவமதிக்காமல் வாழ்வதே மனித குலத்திற்கேற்ற பண்பாகுமென வாழ்பவர்கள் இந்துக்கள்.

எனவே இவ்வாறான சேதப்படுத்தல்களை மேற்கொள்பவர்கள் தமது தீய நோக்கத்தை கைவிட்டு எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

மேற்படி திருகோணேஸ்வர ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் திருமலை பொலிசில் முறைப்பாடு செய்துள்ளனர். திருமலை பிரதேச காவல்துறையினர் இது தொடர்பாக நீதியான விசாரணையை முன்னெடுத்து தவறு செய்தவர்களை நீதியின்முன்நிறுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம.

| | |
|---|---|
| மா.தவயோகராஜா | வே.கந்தசாமி |
| தலைவர் | பொதுச்செயலாளர் |

**அனுபந்தம் 03**

11-03-2019

**திருக்கேதீச்சர ஆலயத்தின் வரவேற்பு வளைவு பிடுங்கியெறிப்பட்ட சம்பவம் தொடர்பில் மாமன்றத்தின் கரிசனை**

இந்த ஆண்டு சிவராத்திரி தினத்திற்கு முன்னரான ஆயத்தப் பணிகளின்போது, நீண்டகாலமாக மாந்தை வீதியின் முகப்பில் அமைக்கப்பட்டிருந்த திருக்கேதீச்சர ஆலயத்திற்கான வரவேற்பு வளைவினைச் சீர்செய்யும் நோக்கில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு இடையூறு செய்து, அவ் வளைவினைக் பிடுங்கியெறிந்து அட்டூழியம் செய்த அந்நிய மதத்தவர்களின் செயல் தொடர்பில் அகில இலங்கை இந்து மாமன்றம் மீண்டும் தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

அச் சம்பவத்தின் தொடர்ச்சியாக, அச் சம்பவத்திலீடுபட்டவர்களின் புகைப்படங்களும் காணொலிகளும் சாட்சியாக வழங்கப்பட்டதன் அடிப்படையில். அந் நபர்களைக் கைது செய்யுமாறு மன்னார் மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளையை அந்த மாவட்ட பொலிசார் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். எந்த ஒரு தனி நபரினதும் அல்லது மத அமைப்பினதும் வழிகாட்டலில், சட்டவிரோத அட்டூழியங்களை புரிந்தவர்களை இதுவரை கைது செய்யாதது என்பது இந்த நாட்டின் சட்டத்தினையும், நீதிபரிபாலனத்தையும் நிந்தித்து, பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்யும் அநீதியுமாகும் என்பதையும் சுட்டிக்காட்ட விளைகின்றோம்.

இத் துன்பியல் சம்பவம் தொடர்பில் இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு அந்நியமத குருமார்கள் வெவ்வேறு விதமான அறிக்கைகளை விடுத்துள்ளனர். மன்னார் மாவட்ட அந்நியமத குரு விடுத்துள்ள அறிக்கையானது அச் சம்பவத்தை நியாயப்படுத்துவதுபோலவும், முற்றுமுழுதாக சம்பவத்தை திரிப்பதாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறு மக்களைத் திசைதிருப்பும் செயல்களைக் கைவிட்டு, இந்த நாட்டில் அனைத்து மதங்களுக்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதைப்பற்றிப் பேசிக்கொண்டே பின்புலத்தில் தமது செயற்பாடுகள் மூலம் இந்த நாட்டில் குழப்பங்களையும் பிணக்குகளையும் ஏற்படுத்தும் பாம்பின் நாக்குப்போன்ற இரட்டை நிலைப்பாட்டையும் விட்டுவிடவேண்டும் எனவும் மீண்டும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**அனுபந்தம் 04**

## அகில இலங்கைஇந்து மாமன்றத்தின்
## தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்தும் கோரிக்கையும்

உதயமாகும் விகாரி புதுவருடத்தில் சுயநிர்ணய உரிமையுடனான ஒளிமயமானதொரு எதிர்காலம் எம்மக்களுக்கு கிட்ட வேண்டும் எனவும், சகல செல்வங்களும் பெற்று இந்த உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களுக்கு நிம்மதியான, சுதந்திரமான வாழ்க்கை அமைய வேண்டும் எனவும் எல்லாமம் வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

கடந்து போகின்ற வருடத்தில் ஆக்கபூர்வமான எந்தவொரு தீர்வும் தமிழ் மக்களுக்குக் கிட்டாது போனாலும், இந்தப் புத்தாண்டையும் வழமைபோல் பல்வேறு எதிர்ப்பார்ப்புகளோடும், நம்பிக்கைகளோடும் “சற்றும் மனந்தளாராத விக்கிரமாதித்தன்” போல வரவேற்கிறார்கள். கடந்த மூன்று தசாப்தகாலங்களுக்கும் மேலாக பல்வேறு துயரங்களையும் சந்தித்து வந்த எமது சமுதாயம் யுத்த அனர்த்தம் முடிந்து நிம்மதிப் பெருமூச்சு விடலாமென ஏங்கியபோது சமாதானகாலமெனக் கூறப்படும் யுத்தத்திற்குப்பின்னரான காலத்திலும் தொடர்ந்தும் சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கியவண்ணமே வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர். “சாணேற முழம் சறுக்கும்” என்ற பழமொழி ஈழத்தமிழ் மக்களுக்கே உரித்தானதாகவுள்ளது.

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் சொந்த நிலங்கள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. ஒருபக்கம் “பெருமளவான நிலங்கள் கையளிக்கப்பட்டுவிட்டதாக” கூறும் அரசும், மறுபுறம் தமது காணிகளை விடுவிக்க 2 வருடங்களுக்கு மேலாக வீதியில் இரவு பகல் போராடும் மக்களும் என, எமது இனம் குறுகிய பலாபலன்களுக்காக பலிக்கடாவாக்கப்பட்டுள்ளதை தெளிவாகக் காட்டுகின்றது.

காணாமல் போனவர்களின் நிலை குறித்து அரசு எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. காணாமல்போனோரைத் தேடவேண்டிய பொறுப்பை மூடிமறைத்து அவர்களுக்கு இழப்பீடு வழங்க முன்னிற்பதானது, தமது குற்றங்களை மறைக்கத்தான் என்பது வேதனையான விடயம்.

தொடர்போராட்டங்கள் செய்தும் அரசியல் கைதிகளின் விடுதலை அரசால் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. மீள்குடியேற்றப்பட்ட மக்களின் அடிப்படைத்தேவைகள் திருப்திகரமாக முன்னெடுக்கப்படவில்லை. மேலும், சிறுபான்மையினத்தவரின் வணக்கத் தலங்களை அழித்தல், சேதமாக்கல் அவர்களின் குடிப்பரம்பலை மாற்ற முயற்சித்தல் போன்ற கைங்கரியங்களில் பெரும்பான்யினருடனிணைந்து ஏனைய மதத்தினரும் ஈடுபடுவதுடன், இந்துக் கோயில்களிலுள்ள விக்கிரகங்கள் களவாடப்படுவதும் சேதப்படுத்தப்படுவதும் தொடர்கதையாகவுள்ளது. குறிப்பாக 2018ம்ஆண்டு மகாசிவராத்திரி தினத்தில் இந்துக்களின் புனிதத்தலமான திருக்கேதீச்சர திருத்தலத்தில் மகாசிவராத்திரியை அனுட்டித்துக் கொண்டிருந்த் வேளையில் அதே பிரதேசத்திலிருந்த இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்டு விக்கிரகங்கள் உடைக்கப்பட்டதுபோல, இவ்வருடமும் சிவராத்திரிக்கு ஒருசில தினங்களுக்கு முன் திருக்கேதீச்சர ஆலயத்தின் வரவேற்பு வளைவு மந்தைகளான மாந்தர்கூட்டத்தால் ஒரு மதகுருவின் முன்னிலையிலே “உலகமே வியக்கும் வகையில் பிடுங்கியெறிந்ததும்”, அச் செயலை மன்னார் ஆயரே நியாயப்படுத்துவதும் என பெரும் அதர்மம் இடம்பெற்றது. இதுவரைகாலமும் மன்னாரில் இந்து மக்களை ஒடுக்க, ஏனைய மதத்தினரின் திரைமறைவு திட்டங்கள் எதுவும் நடைபெறவில்லை என்று நம்பியிருந்த உலகத்தை, அவ்வாறான, இந்துக்களை ஒடுக்கும் திரைமறைவு செயற்திட்டங்கள் மாற்று மதத்தவரால் நிச்சயமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றதை, மேற்படி சம்பவம் வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது. இச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யும்படி நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டிருந்தும், அதனை உதாசீனம்செய்து பொலிசாரையே தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக்கூடிய அளவிற்கு அங்கு நிலைமைகள் இந்துக்களுக்கு எதிராக உள்ளதை பட்டவர்த்தனமாக காட்டியது. இவ்வாறான நடவடிக்கைகள்மூலமாக, இந்ா நாட்டின் இறையாண்மையைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என, சம்பந்தப்பட்டவர்களைக் கோரிநிற்கின்றோம்.

சமயப்பணியுடன் சமூகப்பணிகளையும் மேற்கொண்டுவரும் இந்து மாமன்றம் தமிழ் மக்களுக்கு எங்கெல்லாம் வேதனைகள் சோதனைகள் ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் உடன் சென்று உதவிக்கரம் நீட்ட என்றும் பின்நிற்கப்போவதில்லை. இவ்வாறான சம்பவங்களுக்கு மாமன்றம் என்றும் தராதரம் பாராது தகுந்த நடவடிக்கைகளை எடுக்க என்றுமே தயங்காது என்பதையும் உறுதியாக கூறிவைக்க விரும்புகிறோம்.

தமிழ் மக்களது வாழ்நாளில் தொடரும் துயரநிலை முற்றாக நீங்கி, உதயமாகும் விகாரி புதுவருடத்தில் சுயநிர்ணய உரிமையுடனான ஒளிமயமானதொரு எதிர்காலம் எம்மக்களுக்கு கிட்ட வேண்டும் எனவும், மக்களின் நல்ல எதிர்காலத்திற்கென அரசாங்கமும் நல்லெண்ண நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் எல்லாம்வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பொதுச் செயலாளர்

**அனுபந்தம் 05**

## "மனிதத் தன்மையற்ற தாக்குதல்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் கடும் கண்டனம்"

கடந்த 21-04-2019ந் திகதியன்று, இலங்கையில், மத வழிபாட்டுத்தலங்கள்மீதும் சுற்றுலாத்தலங்கள் மீதும் நடந்தேறியுள்ள மனிதத்தன்மையற்ற தாக்குதல்கள் உலகையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இவ்வாறான கொடூர தாக்குதல்களை அகில இலங்கை இந்து மாமன்றம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இத் தாக்குதல்களில் இலங்கையர்களும், இந்த நாட்டிற்கு சுற்றுலாவாக வருகைதந்த வெளிநாட்டினரும் என, 300ற்கு மேற்பட்டோர் இதுவரை உயிரிழந்துள்ளதுடன் பல நூற்றுக்கணக்கானோர் காயம் அடைந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றவண்ணம் உள்ளனர்.

இச் சம்பவங்களில் உயிரிழந்தோரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவர்களை இழந்து வாடிநிற்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம். காயமுற்றவர்கள் விரைவில் குணமடைந்து தமது இயல்பான நிலைக்கு மீள எல்லாம்வல்ல பரம்பொருளைப் பணிந்து பிரார்த்திக்கிறோம்.

மதங்கள் மனிதனை நல்வழிப்படுத்தி, மனிதனை மனிதனாகவே இந்த உலகில் அனைத்து உயிர்களையும் மதித்து வாழும் நெறிமுறையைப் போதித்து அவனைப் பண்புள்ளவனாக மாற்றுபவை என்பது பொது நியதி. இந்த உலகில் மனிதர்கள் வாழும் காலத்தில் ஒருவருக்கொருவர் சமாதானத்துடனும், சகோதரத்துவத்துடனும் பிற உயிர்கள் மீது அன்புடனும் வாழவேண்டும். மனிதராகப்பிறந்த ஒவ்வொருவருக்கும் அந்தக் கடமை உண்டு என்பதை என்றும் எமது நினைவில் கொள்ள வேண்டும்.

இத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எமது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன், நடைபெற்ற தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதையும் உறுதிசெய்யவேண்டும் எனவும், இலங்கைவாழ் மக்கள் சார்பில் நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்

**அனுபந்தம் 06**

6th June 2019

**LETTER TO HIS EXCELLENCY HONOURABLE PRIME MINISTER OF INDIA**

Your Excellency Shri Narendra Modi
Prime Minister of the Republic of India,
India.

Honourable Sir,

On behalf of the Hindus of this country our Congress (the Federation of Hindu Religious Associations and Trusts in Sri Lanka) is proud of your being re-elected to lead India for a second term.

We recollect that during your initial election campaign you said that "with Tamils living all over the world including Sri Lanka, it should be a priority of the Indian Government to take care of their well being"

and you promised to do so if your Government assumes power after the elections. His Almighty has again given you that power and we, the Hindus of this country, most of whom are Tamils, are hopeful that your Government will expedite finding a political solution to satisfy the aspirations of Tamils in this country.

The Tamils of this country the majority of whom are Hindus, have been suffering for more than six decades. They have been denied of their entitlements and rights by the successive governments of Sri Lanka who had chosen to obtain and enjoy majority votes on racists cries and Communal discrimination.

Despite several appeals from minorities, the Governments in the centuries have failed to rise above their political ambitions and narrow mindedness and agree to grant the Tamil speaking people their due rights in satisfaction of their aspirations to live as citizens of Sri Lanka with equality and dignity. They have been often reduced to the status of second class citizens and on many occasions as refugees.

We appeal on behalf of the Hindus to take appropriate action at diplomatic level and restore the rights of our people so that they can also live in their country with honour and dignity.

We also take this opportunity to bring to your good-self's attention that several Hindu Temples which were damaged during the war time have not been restored. This unfortunate situation prevails in villages of poor Hindus who have not been given appropriate funds by the Government of Sri Lanka to restore their Temples despite several attempts. Further there have also been incidents of Hindu Temples being destroyed and Buddhist Temples subsequently being built in the vicinity erasing evidence of the previously existing Hindu Temple.

We therefore also appeal to your Government to financially assist the restoration of these Temples. We are willing to furnish the requested details of such assistance required.

Yours in Service,
V. Kandasamy
General Secretary
ALL CEYLON HINDU CONGRESS

**அனுபந்தம் 01**

## கன்னியா வென்னீரூற்று, புராதன விநாயகர் ஆலயத்தினை ஆக்கிரமித்து விகாரை அமைக்கும் செயலுக்கு மாமன்றம் கடும் கண்டனம்

ஆண்டுகள் பல கடந்தாலும், ஆட்சிகள் பல மாறினாலும் இந்த நாட்டில் வாழும் இந்துக்கள் மீது மதரீதியாக ஏதோ ஒரு வகையில் அடக்கு முறைகளும் துன்புறுத்தல்களும், அதர்மமான செயல்களும் நடந்து கொண்டேயிருக்கின்றது. இந்நாட்டின் அரசாங்கம் 2015ம் ஆண்டில் "நல்லாட்சி" என்ற வாசகத்துடன் ஆட்சிப்பொறுப்பிலமர்ந்த போது, இந்நாட்டில் நல்லிணக்கம் உருவாகி சமாதான சகவாழ்வு மலரும் என்ற பெரும் நம்பிக்கை இந்நாட்டு தமிழ் மக்களுக்கு இருந்தது. ஆனால் அரசோ, அரச நிறுவனங்களோ செயற்பட்டு வரும் முறையானது, தமிழ் மக்களின் அந்த நம்பிக்கையைக் குறைத்து இல்லாமற் செய்வதுபோல உள்ளது. ஈழத்திருநாட்டின் பலபகுதிகளிலும் இந்துமத தொன்மைச் சின்னங்கள் காணப்படுகின்றன. அச் சான்றுகள் காலத்துக்கு முந்திய வரலாற்றைப் பறைசாற்றி நிற்கின்றன. இவற்றையெல்லாம் மாற்றியமைத்து, அவற்றைப் பௌத்த சின்னங்களாக திரிபுபடுத்தி, வரலாற்றை மாற்றும் கைங்கரியத்தை "தொல்லியற் திணைக்களம்" முன்னெடுத்து வருகின்றது. ஒரு அரச திணைக்களம் என்ற வகையில் அது, இந் நாட்டு மக்களுக்கு இன-மத-மொழி வேறுபாடின்றிச் செயலாற்ற வேண்டியது சட்டத்தின்படி கட்டாயமானதாகும்.

தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள இந்து ஆலயங்கள் மற்றும் தமிழரின் புராதன வாழ்விடங்கள் தொடர்பில் பல தடவைகள் அரசிற்கு முறையிட்டும் அரசாங்கமும் பாராமுகமாக இருந்து வருகின்றது எமது மக்களை வேதனைகொள்ளச் செய்துள்ளது. திருகோணமலை சிவன் ஆலயம், கன்னியா வென்னீரூற்றுக்கள் ஆகிய கிழக்குமாகாண இடங்களிலும், வடக்கில் மன்னார் திருக்கேதீச்சரம், செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் வெடுக்குநாரிமலை எனப் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொல்லியல் திணைக்களத்தால் பட்டியற்படுத்தப்பட்டு, அங்கு பௌத்த விகாரைகள் அமைப்பதற்கு திணைக்களம் நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவிவருகின்றது. இந்த வகையிற்தான், திருகோணமலை, கன்னியா வென்னீரூற்றுப் பிள்ளையார்கோவில் அமைந்துள்ள காணியும் தொல்லியல் திணைக்களத்தால் புராதன இடமாகப் பட்டியற்படுத்தப்பட்டு அந்தப் பிள்ளையார் கோவில் கட்டிட வேலைகளுக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்ட அதேவேளை, அருகிலுள்ள வில்கம் விகாராதிபதி தலைமையில் அந்தக் காணியில் அடாத்தாகக் குடியேறி விகாரை அமைக்கும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு

வருகின்றனர். இச் செயற்பாடுகள் தொடர்பில் அகில இலங்கை இந்து மாமன்றம் தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிப்பதுடன், எமது உரிமைகளை மீட்டு எமது பாரம்பரிய சின்னங்களைப் பேணுவதற்கு மாமன்றம் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கவும் தயங்காது என்பதையும், தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பொதுச் செயலாளர்